வசன ஞானமணிக்

குறிப்புரை.

OFFICE OF THE REGISTRAR OF ... MADRAS.
26 OCT 1899

சென்னைச் செந்தமிழுரைச் சங்கத்தார்.

Madras:
PRINTED BY THOMPSON AND CO.;
AT THE "MINERVA" PRESS, POPHAM'S BROADWAY.

1899

Price As. 4.

116781

O-,IDTM,C:g
M99

சூளாமணி

…ளாமணியென்பது தேவமணி யிரண்டனு ளொன்று; மற்றையது …ணியென்ப. சூளா-தலை; மணி-இரத்தினம். எனவே தலையின் …ப்படும் இரத்தினம் அல்லது தலையினது (சம்பந்தமான) இரத்… …து பொருள்; முதற்பொருளில் ஏழாம்வேற்றுமை யுருபும்பய… …றொக்க தொகையும், இரண்டாம் பொருளில் ஆறும் வேற்றுமைத் …கையுமாம். இது 'சூடாமணி' யெனவும் வழங்கும். "டளயோர …" என்ற வடநூல் விதிபற்றி டகாரமும் ளகரமும் ஒத்து நடத்தலிற் …பாம். 'சூளாமணி' என்ற வொருவகைத் தலையணியின் பெயர் …மணி' யென்பது போல உவமவாகுபெயர்க்காரணக் குறியாய் நூலுக் …து. எனவே பலராலும் அத்தகைய சிறப்புடைத்தென மேற்கொள் …ற்றுப் பாராட்டத் தகுவதொரு நூலா மென்பது பெற்றாம். 'சூளா …டலம்' எனக்கம்பரும், 'சூடாமணி நிகண்டு', 'சத்திர சூளாமணி' …பிறருங் கூறுதல் காண்க. சூடா: தலை மயிர் முடியுமாம். சிகாமணி, …ணி, சிரோரத்ந மென்பனவுங் காண்க. சிந்தாமணி, கௌத்துவ …மந்தகமணி யென்பனபோலச் சூளாமணியு மொருவகைத் தேவ …பர் பிங்கலந்தை யுடையாரும். வசன சூளாமணி; வசனமாகிய …ளை விரிதலிற் பண்புத்தொகையாம்.

இந்நூலினைச் செய்யுணடையிற் செய்தவர் **தோலா மொழித்தேவர்** என்னும் பெரிய வொரு சைன முனிவர். இவர் கார்வெட்டி நகரத்தரச னொருவனாகிய விசயன் என்போனது காலத் திருந்தவ ரென்பதும் இவர் சைன ரென்பதும் பின்வரும் பாடலானுணரப்படும்:— "திக்கெட்டும் புகழ் படைத்த திறல்விசயன் புயலனைய கையன் றெவ்வைக், கைக்கொட்டி நகை… க்குமிகுற் கார்வெட்டி யரையன்வள நாடற் கேற்பப், பொச்செட்டும் பத்… …லான் புகழ்த்தரும தீர்த்தன்மலர்ப் பதம்பூசிப்போன், சொற்கெட்டா வர… …தோலா மொழிசூளா மணியுணர்வோர் துறைகண் டோரே." இனி யிந்நூல் சீவகசிந்தாமணி போல விருத்தபாப்பி னியன்றதும் சொற்பொருட் செறி வுடையதுமாகிய வொரு செந்தமிழ்ப் பெருங்காப்பியமாம். சிந்தாமணி நூல கத்துச் சிறப்புடையரசனைச் 'சிந்தாமணி' யென்றல் போல இதனகத்தும் சிறப்புடையரசன் 'சூளாமணி' யெனப்படுகின்றனன். யாப்பருங்கல விருத்தியுரையினும், யாப்பருங்கலக்காரிகையுரையினும், சிலப்பதிகார வடியார்க்கு நல்லாருரையினும் இந்நூற்பாக்கள் மேற்கோள் காட்டப்பட்டுள. இந்நூலின் விருத்தத்தொகை-௨௧௩௧. மாபுராண மென்னும் சைன முதனூலிற் சுருங்கிக் கிடந்ததை விரித்தல் நூல்யாப்பினாற் செய்தன ரென்ப. இது கடவுள் வாழ்த்து, பாயிரம், நாட்டுச்சருக்கம், நகரச்சருக்கம் என்னு மிவை தவிரப் பத்துச்சருக்கங்களுள்ளது.

சுரமை நாட்டிற் போதன நகரின்கட் பயாபதி யென்னு மோ[illegible] மிகாபதி சசி யென்ற இருமனைவியரிடத்தும் முறையே விசயன், திவிட்டன் என்ற மக்களிருவரைப் பெற்றனனென்பதும், இவர்களுள் இளையோனாகிய

...னா மு... ...தலை
...வர்த்தியொடு திவிட்டன் பொருது அவ
...லகினைக் கைப்பற்றி அதனைத் தனது மாமனார்
...தன னென்பதும், பயாபதி தன்மக்களிடத்து இராசயாரத்தை
...னென்பதும், திவிட்டன் கோடிக்குன்றம் பறித்தேந்தின னென்ப
திவிட்டன் சயம்பவையினிடத்து அமிர்தசேன னென்று மகனையும் சோ
மாலை யென்னும் மகளையும் பெற்றன னென்பதும், இவர்கட்கு முறையே
...ரசன் மகனாய அருக்க கீர்த்தியின் மகளையும் மகனையும் மணஞ்செய்வித்
னென்பதும், பயாபதி துறவுபூண்டு முத்தி யெய்தின னென்பதும்
சரிதம் இந்நூலின் கண்ணே மிகவுஞ் செவ்வனே விரித்துப் புனை
கூறப்பட்டுளது. இன்னும் ஆங்காங்குச் சில பண்டைக்கால வழக்
களும், சைனமதத்தின ரொழுக்கங்களும், அரசாட்சி செய்யும் முறை
காணப்படும். உதாரண முகத்தால் உலகியனெறியு மொருவாறு கூறப்
பட்டுளது.

இக்காப்பியத் தலைவனான திவிட்ட னென்போன் ஆருகத மகாபுரா ணத்திற்கூறிய நவவாசுதேவர்களுண் முதல்வனான திப்பிரஷ்ட வாசுதேவ னெனவும், திவிட்டனுக்குப் பகைவனான அச்சுவகண்டன் நவப்பிரதி வாசுதே வர்களுண் முதல்வனான அயக்கிரீவப் பிரதிவாசுதேவ னெனவும் கூறப்ப றனர். இந்நூலிற் சியவனையும் வித்தியாதரவிவாகமும் சேடியர் சங் முதலாயின வெல்லாங் கண்ணபிரானது சரித்திரத்திற் சேர்ந்தனவ னும் திவிட்டராசன் திறமுங் குணாதிசயங்களுந் திருமாலின் அவதாரமாய கண்ணனதும், திவிட்டற்குத் தமயனாகிய விசயனது திறமுங் குணாதிசயங்களும் கண்ணன் மூத்தோனாயபலராமனதுமாகிய இலக்கணங்களோடு பெரும்பாலு மொத்திருக்கும். பலராமகிருஷ்ணரிற் கிருஷ்ணனுக்குச் சிறப்புமிகுமாறு போல ஈண்டுந் திவிட்டற்குச் சிறப்பு மிக்கவாறு கண்டுகொள்க. சிந்தாமணியிற் சீவகன் பலரு மெடுத்தற்கரியதோர் கல்லினைக் கையகத்தேந்தி ...டினமையுஞ் சாந்தருவதத்தையென்ற வித்தியாதரமகளை மணந்துகொண்டமையும் இந்நூலில் திவிட்டன் கோடிக்குன்ற மெடுத்தமையினையும் சயம்பவையினை மணந்துகொண்டமையினையு மொக்குமாறுணர்க.

புறவுரை—பக்கம்-1.

புறவுரை யென்பது நூலகத்துக் கூறப்படாத சிலபொருள்களை நூலுக்குவெளியே தனியேசொல்லுவதாம். "முகவுரை பதிக மணிந்துரை நூன்முகம், புறவுரை தந்துரை புனைந்துரை பாயிரம்" என்றார் நன்னூலார்; ஆதலின் இவை யனைத்தும் ஒருபொருட் சொற்களென் றுணர்க.

இலக்கியம்—'லக்ஷ்யம்' என்னும் ஆரியச்சொற் றிரிவு. இலக்கணத்திற்கு இடமாவதென்பது பொருள். காப்பியம்-காவியம். மாணவர்-மாணாக்கர். கத்தியம்-வசனம். பகிரங்கஞ் செய்தால் - வெளிப்படுத்தினால். சாவகாசம் - Leisure.

பக்கம்-2.

சென்னைச் சர்வகலாசங்கத்திற் பிரவேசபரீக்ஷை - The Matriculation Examination of the Madras University. நியமிப்பான்-ஏற்படுத்தும் பொ

894.8111

ருட்டு. திராவிட பாடசபையார்-The Dravidian Board of Studies. தற்காலவித்யாக்கிரமம் - இக்காலத்துக் கல்வியின் முறைமை. பூகோளசாஸ்திரம்-நிலவுலக வுருண்டையைப் பற்றிக்கூறும் நூல்; Geography. ககோளசாஸ்திரம் - வானத்தின்கணுள்ள சூரியன் சந்திரன் முதலிய மண்டலங்களைப் பற்றிக்கூறும் நூல் Astronomy; கம் - வானம், கோளம் - உருண்டை. சத்த - சப்த; ஏழு. தீவகம் - தீவு; த்வீபம். 'சத்த' என்னும் அடைமொழியைத் தனித்தனி சமுத்திரத்தொடுந் தீவகத்தொடும் அசலத்தொடுங் கூட்டி யுரைக்க. அசலம் - மலை; சலிப்பில்லாதது என்பது அப்புப்பொருள். விரவி - கலந்து. மாதாந்தரம் - மாதந்தோறும். சம்புடம் - Volume. மெச்சி - 'மெய்ச்சி' யெனவும் வழங்கும்; கொண்டாடி. பஞ்சதந்திரக் கதை - தாண்டவராய முதலியார் செய்தது. திரிசொற்பிரயோகம் - திரிசொற்களை ஆங்காங்கு உபயோகித்தல்; திரிசொல் இயற்சொல்லின் வேறுபட்டசொல்; திரிதல் - வேறுபடுதல்; வேறுபடுதலென்றது இயற்சொற்போல இயல்பாலுணரப்படாது அரிதின் உணரப்படுதலை. [நன். பெய. 15.] அர்த்தம் - பொருள்; meaning. அருக்கி - அருமைப்படுத்தி; 'அருகு' என்பதன் பிறவினை. ஒருபொருட் பன்மொழி: ஒருபொருளைக்குறித்த பலசொற்கள். இவை சிறப்புப்பற்றி யுபயோகிக்கப்படுவன. "ஒருபொருட் பன்மொழி சிறப்பினின்வழா" என்றார் நன்னூலாரும். வரைந்தால் - எழுதினால். பெருக்கி, அருக்கி, நெருக்கியென எதுகைத்தொடைக்குரிய சொற்கள் அடுத்தடுத்து வந்தமை விருத்தியநுப்பிராசம் என்னுஞ் சொல்லணியாகும்; அஃதாவது எழுத்து ஒன்றேனும் பலவேனு மிடையிட்டுப் பல்கால் வருவது. பிரதமவித்தியா பரீக்ஷை - First in Arts Examination. அருகம் - தகுதி; யோக்கியம். முதனூல் ஈங்குச்செய்யுட்சூளாமணி. பல்லாற்றால் - பலவிதத்தினால். திரித்து - திரிசொற்களுடைத்தாக்கி. பரியாயங்கள் - பொருளொருமையுள்ள வேறு சொற்கள். பிற -Synonyms. தெரித்து-தெரிவித்து. கமழ - மணக்க. வரித்து - விரும்பி மேற்கொண்டு. விரித்து, திரித்து, தெரித்து, வரித்து என்றமையும் அவ்வணியின்பாற்படும். இரண்டுபட்டு - வேறுபட்டு. சான்று - சாட்சி. ஆன்றோர் - அறிவு நிறைந்த பெரியோர். மன்னித்தல் - பொறுத்தருளல்; இஃது உலகவழக்குச் சொல்லேயன்றிச் சான்றோர் செய்யுளுரைகளிற் பயின்று வாராமை காண்க.

சூளாமணி.—பக்கம்-1.

தற்சிறப்பு - தன்னைப்பற்றிய சிறப்பு அல்லது தன்னுடைய சிறப்பு; ஈண்டுச்சிறப்புப்பாயிரமாம். இது தானேயுஞ் செய்யலாம். இதன் கண்ணே பெரும்பாலுங் கடவுள் வாழ்த்துஞ் செய்பொருளுங் கூறப்படுதல் வழக்காம். என்னை? "தெய்வவணக்கமுஞ் செயப்படுபொருளு, மெய்தவுரைப்பது தற்சிறப்பாகும்" என்பதிலக்கணமாமாதலின். இச்செய்யுளின் கண்ணும் அவை காண்க. இச்செய்யுள் வசனநூலாசிரியர் செய்து கொண்டதாம்.

1. **உரை**:—தோல் ஆனனத்தான் தொழ - யானை முகத்தையுடைய விநாயகக்கடவுளை யான்வணங்குதலால், கள் அவிழும்வெள்ளைமரை காலின்ற தேன் றளிக்கும் வெண்டாமரை மலரில் வாழ்கின்ற அழகுடையவளாகிய சரசுவதி, மேவும் —விரும்பியுதவுவாள்; கனிந்த தெள்ளுதமிழ் தெள்ளை ளைப்போர்த்து இலங்கும் - மிகவுமினிய தெளிவான தமிழ்மொழியின் மிக்க

மேம்பட்ட செல்வங்கள் [சொற்செல்வம் பொருட்செல்வம்] கூடிவிளங்கும்; (ஆதலின்), தோலாமொழித்தேவர் சூளாமணிச்சரிதம் - தோலாமொழித்தேவர் பாடிய சூளாமணியென்ற காப்பியத்தின்கட் கூறப்பட்ட சரித்திரம், மெள்ளவரும் - மெதுவாக [ஒருவிதவிடையூறுமின்றி] (எழுத) வரும்.

குறிப்பு :—கள்ளவிழும் வெள்ளைமரை, தெள்ளுதமிழ்க் கொள்ளைவளம் இவை **சேகாநுப்பிராசம்** என்னுஞ் சொல்லணியின்பாற்படும். சேகாநுப்பிராசமாவது இரண்டிரண்டு மெய்கள் உயிரேறப்பெற்று இடைவிடாதுமறுத்துவருவது. மரை - 'தாமரை' யென்பதன் முதற்குறை. விநாயகக்கடவுளை வணங்கவே நாமகள் தானேவந்துதவுவாள், சொற்பொருட் செல்வங்களுந் தானே வந்தெய்துமென அக்கடவுளின் அருள் வல்லபத்தைச் சிறப்பித்துச் சொல்லியபடியாமென்பதுணர்க; இதுநுதலிப்புகுதலென்னு முத்தி; ஆகவே, இது தற்புகழ்ச்சியாகாது. இவ்வாறே "நான்முகற்றொழுது நன்கியம்புவனெழுத்தே" யென்றார் **நன்னூலாரும்**. சரஸ்வதி, பெருமானது அருள்வழி நிற்பாளென்பதனை "ஞானவாணிவந் திருத்தன ளன்பர்தந்நாவில்" என்ற **திருவிளையாடற்புராணச்** செய்யுளானுமறிக. மெள்ள-'மெல்ல' வென்பதன்போலி; 'அலமரு' என்பதை 'அளமரு' என்றாற்போலக்கொள்க. "அளமருபிறப்புக வமலற்குய்த்திடும், வளமலர்" என்றார் **தணிகைப்புராண**முடையாரும். 'மெள்ளவரும்' என்பதனானே அவையடக்கமு மொருவாறு கூறப்பட்டமை காண்க. இனி 'மேவும்', 'இலங்கும்' என்பனவற்றைப் பெயரெச்சமாக்கிப் பொருளுரைத்தலுமாம். பின்னீரடியினும் **அடிமுதன் மடக்கணி** யுண்மையுணர்க. இது நேரிசைவெண்பா.

காவியக்காப்பு :—சூளாமணிக் காப்பியத்தின்கணுள்ள காப்புச்செய்யுள். காப்பு - காத்தல்; இது காக்கின்றகடவுள் விடயமான வணக்கத்திற்குத் தொழிலாகுபெயர். இச்செய்யுள் தோலாமொழித்தேவர் செய்தது.

2. உரை :—வினையின்தொகை வென்றான் ஆகி - கருமங்களின் றொகுதியைச் சயித்தவனாய், ஒன்று ஆய் தன்கண் விரிந்து பரந்த - ஒப்பின்றித் தனிமைத்தாகித் தன்னிடத்தினின்றும் வியாபித்துப்பரவிய, உணர்வின் ஒழியாது முற்றும் சென்றான் - தனது பேரறிவினாற் குறைவற யாவற்றையுமறிந்து கொண்டவனும், திகழும் சுடர்சூழ் ஒளி மூர்த்தி ஆகி - விளங்குகின்ற பிரபாமண்டலத்தாற் சூழப்பெற்ற ஒளிமயமான வடிவுடையவனுமாகி, நின்றான் அடிக்கீழ் பணிந்தார் - அழியாதுநின்ற அருகக்கடவுளினது திருவடிகளிலே வணங்கினவர், வினைநீங்கிநின்றார் - (இரு) வினையுமொழிந்து (முத்தியுலகினழியாது) நிலைபெற்றவராவர்.

குறிப்பு :—இஃது அருகசரணம், சித்தசரணம், சாதுசரணம், தன்மசரணமென்னும் நால்வகைச் சைனவணக்கங்களுள் **அருகசரண**மாம். வினையின் றொகையை வென்றானாகிச் சென்றானு நின்றானுமாகியவனது அடியெனக் கூட்டிக்கொள்க. 'வினையின் றொகையாய' வென்பதூஉம் பாடம்; அதற்கு வினையின் றொகையாயவற்றை வென்றானுஞ் சென்றானு நின்றானுமெனக்கொள்க. வென்றாய பின்னரே மற்றவியல்புகள் நிகழ்தலின் 'ஆகி' யென்னும் பாடமே சிறப்புடைத்து. 'தொகையாய்' என்று பாடங் கோடல் சந்தத்திற் கொவ்வாதென்றொழிக. விரிந்துபரந்த - ஒருபொருட் பன்மொழி.

தன்கண் - வேற்றுமையுருபு மயக்கம். ஒன்று-அத்விதியம், ஏகம். 'அடைதற் பொருளவாஞ் சொற்கள் அறிதற் பொருளினவுமாம்' என்ற வடமொழி நியாயத்தினாற் 'சென்றான்' என்றதற்கு அறிந்தவ னென்றுரைத்தாம். இனி யான்மகோடிகளின் அறிவிற்சென்று கலந்தவ னெனலுமாம். உணர்வின் : இதன்கணுள்ள ஏதுப்பொருளினதாகிய 'இன்'னுருபை யொப்புப் பொருளினதாக்கித் தன்னிடத்து ஒன்றேயாய் விரிந்து பரவிய அறிவினைப் போலத்தான் உலக மெங்கு மிடைவிடாது பரவிச் சென்றவ னென்பது மொன்று. பிரபாமண்டலமாவது சந்திராதித்தியம், நித்தியவிநோதம், சகல பாசகம் என்னும் மூன்று பிரகாரங்களையுடைய வொளிவட்டமாம். அருகக் கடவுளின் வடிவம் இவ்வாறு ஒளி வட்டத்தாற் சூழப்பட்டிருக்கு மென் பதனை யிந்நூல் துறவுச் சருக்கத்தினுங்காண்க. 'அடிக்கீழ்' என்பதற்கு 'அடிகளை' யென வேற்றுமையுருபு மயக்கமாகப் பொருளுரைத்தலுமாம். நின்றார்; தெளிவும் விரைவும் பற்றிய கால வழுவமைதியாம். 'உணர்வின் னுழியாது' என்புழி னகர வொற்று விரித்தல் விகாரம். 'நீங்க நின்றார்' எனப் பாடமோதுவாரு முளர். அது சிறவாமை யுய்த்துணர்க. இது கலி நிலைத்துறை.

முதலாவது : குமாரகாலச் சருக்கம்.

குமாரரது காலத்தைப்பற்றிய சருக்கம் என்பது பொருள்; அன்றிக் குமாரராயிருந்த காலத்தைப்பற்றிய சருக்க மென்பதூஉமாம். பின்னதே சிறப்புடைத்து; 'கௌமார காலச்சருக்கம்' என்திருத்தல் மிகவும் நேரிது. இதன்கட் காப்பியத்தலைவனாகிய திவிட்டனது இளமைப் பருவத்துச் செய்தியும் அவன் றமயன் விசயனது இளமைப்பருவத்துச் செய்தியும் பிறந்து வளர்ந்தமை முதலாயினவுங் கூறப்படுகின்றன.

பரதகண்டம்: (இந்தியாதேசம்.) நவகண்டங்களு ளொன்று. நாபிமகா ராசனது பேரனும் ருஷப மகாராஜனது மகனுமாய பரத மகாராசன் பூர்வம் ஆண்ட இடமாதல்பற்றி யிப்பெயர்த்தாயிற்றென்ப. இனி யிப்பரதன் சகுந்தலைக்கும் துஷ்யந்தனுக்கும் பிறந்தவ னென்றுங்கூறுப. கண்டம்-பாகம்.

முடி - கிரீடம். Crown. மலிந்து - நிறைந்து. படிகின்ற - தங்குகின்ற. கோடிக்குன்றம்-ஒருமலை. இதன் வரலாற்றை அரசியற் சருக்கத்திற் காண்க. [வசன சூளாமணி 105, 106-ஆம் பக்கம் பார்க்க.] அகழ்ந்து - பறித்தெடுத்து. என்ப - என்று (பெரியோர்) சொல்வார்.

பக்கம்-2

சிரோரத்தினம்: சிகாமணி; தலைமேலணியும் இரத்தினாபரணம். போதனம் - Bhutan. மாடம்: உபரிகை, கூடம்: சிகரம். விநோதம்: புதுமை. செல்வ மிகுதியும் இன்ப மிகுதியும் பற்றி வித்தியாதரவுலகு உவமிக்கப்படும். நிகழ்வதை-நடப்பதை. நிதியெனப் படுவவெல்லாம்-நிதியென்று சொல்லப்படுவனயாவும். நிதி - பொருட்குவை; சங்கநிதி பதுமநிதிமுதலாயின. இளைப்பாறி : இதுகாறும் அவையெல்லாம் ஒருவரினின்று மொருவராகமாறி

மாறி வந்து கொண்டிருந்ததனை லுண்டாகிய இளைப்பு கண்படை கொள்ளும்: கண்மூடிக் கொண்டு தூங்கும்; அஃதாவது தலைவர்கள் அவ்விடம் விட்டுப்பெயர்ந்து செல்லாமையென்பது. ஆயிரம் நாவுடையோர்: ஆதிசேஷர் பலர். விரித்துரைதரக்க: விஸ்தரித்துச் சொல்லுந் தன்மையை யுடையது அரதனாதிகள்: இரத்தினம் முதலியன. அரதனம்=ரத்நம். அரதனாதி=தீர்க்கசந்தி. வேற்றுமை - வித்தியாசம், பேதம். இந்தரபுரி: இந்திரன் நகர், அமராவதி. அந்தரபுரி: ஆகாயத்துச் சஞ்சரிக்கும் நகரம். ஆண்டு: அங்கு, வதிந்தாற்போல-தங்கினாற்போல. மன்னுயிர்: இவ்வுலகின்கண் நிலைபெற்ற பிராணிகள். ஓம்பும்: பாதுகாக்கும். பயாபதி அபிதானம்=பிரஜாபதி யென்னும் பெயரையுடைய: பயாபதி=பிரஜாபதி யென்னும் வடசொற்றிரிவு; சனங்களுக்குத் தலைவனென்பது பொருள். மன்பதைகள் சனங்கள்; மக்கள் தொகுதி (Mankind) மன்பதைகளாகிய வுடலுக்கு ஏகதேசவுருவகத்தைப் பூர்த்திசெய்து கொள்க. மதனவேள் - மன்மதன். பூங்கணை: மலரம்பு. வயவேந்தர்: வலியவரசர்; வெற்றி மன்னருமாம். நலிபவர் வருந்துவோர். தத்தம: தங்கள் தங்களுக்குரிய. தருமநெறி: தருமமார்க்கம் ஆறிலொன்று கடமைகொடுத்தல்: பிதிரர், தேவர், விருந்தினர், சுற்றத்தார், தான், என்றுசொல்லப்பட்ட ஐந்திடத்துஞ் செய்யும் அறநெறியை வழுவாமற்செய்தல் இல்வாழ்வானுக்குச் சிறப்புடைய அறமாமென்பது "தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க லொன்றாங், கைம்புலத்தா றோம்பறலை" என்னுந் தேவர்திருமொழியா னுய்த்துணரக் கிடத்தலின் மேற்கூறிய வைந்திடத்தும் செயத்தகு கடமைகளைச் செய்தற்கு ஐந்துபங்கு வேண்டியது ஒருதலை யாதலின் குடிகளது வருவாயுள் ஆறிலொரு பாகமே (One-Sixth) அரையற்குரிய இறைப்பொருளாமா றுணர்க. தாமாகவே: ஏகாரம் பிரிநிலைப் பொருளது. கடமை: கப்பம் (Duty). இறை: வரி (Tax). 'கிடையாது, என்னும் பதத்தின் பின்னர் ஒரு முற்றுப் புள்ளியினைப் பெய்துகொள்க. காரணச்சிறப்புப்பெயர்: ஒரு பொருளைக் குறித்தற்குக் கடவுளானும் அறிவுடையோரானும் இட்ட குறியாகிய பெயர் இடுகுறிப் பெயர். காரணத்தான் வரும் பெயர் காரணப்பெயர். அங்ஙனமாய காரணப்பெயர், காரணப்பொதுப்பெயரென்றும், காரணச் சிறப்புப்பெயரென்றும் இருவகைத்தாம். உ-ம். அணி - காரணப் பொதுப்பெயர்; முடி-காரணச் சிறப்புப்பெயர். ஈண்டு அப்பெயர் அம்மன்னனையே குறித்து நிற்றலின் காரணச்சிறப்புப் பெயராமாறுணர்க. அஃது: அப்பெயர். அவ்வாறொழுகும் நாளில்: அவ்விதமாக நடக்கும் நாளில்.

பக்கம்-3.

இணையாகிய: சமானமாகிய. மிகாபதி: ம்ருகாபதி என்னும் ஆரியச்சொற்சிதை வென்ப. சசி: "ஈயீ நிகரமும்" என்றதனானே 'சசி' யென்பது இங்ஙனம் வந்தது. வரைந்து: மணமுடித்து. சுகுண சௌந்தரிய மாதர்: நற்குணமும் நல்லழகும் வாய்ந்தமகளிர். மாதர்: அழகுடையவர்கள். காமக்கிழந்தியர்: கிழமை - உரிமை; காமவின்பந்தரும் உரிமைமகளிர். வசந்தகாலம்போன்றது இம்மன்னனது அரசாட்சிக் காலமென்று விரித்துரைத்துக் கொள்க. அணிபெற: அழகுதயங்க. இலகுவது: விளங்குவது. பூங்குழைமகளிர்: அழகிய குண்டலமணிந்த மங்கையர். மகளிர்: இர் ஈற்றுப்பலர்பாற்சொற்களு ளொன்று cf பெண்டிர், புத்தேளிர். பொன்மலர் மண்

க்கொம்பு: பொன்னாலயா மலர்கள் நிறைந்த மாணிக்கத்தா லியன்ற பூங்
கொம்பு; பொன்மலர், அவயவங்களுக்கும் ஆபரணங்களுக்கும், மணிக்
கொம்பு, மாணிக்கவெயில் விரிக்கும் உடம்பிற்கும் உவமை. மானவும்:
போலவும்; "போலப்புரைய" என்னுஞ் சூத்திரத்தானுணர்க. அன்னோர்:
பூங்குழைமகளிர். திலதம் - திலகம், நெற்றிப்பொட்டு. திகழ்ந்தனர்: விளங்
கினர். திருமகள்: இலக்குமி. நவீனம்: புதிது. (பிராசீனம்-பழையது) பொ
லியும்: திகழும். மழலைச்சொல்: நிரம்பா மென்மொழியாங் குதலைச்சொல்.
ஆவி: உயிர். மனத்தினுட் பிணிக்கப்பட்ட அரசன்: மனமாகிய சிறையின்க
ண் ஆசையாகியபாசத்தாற் கண்டுண்டு கிடக்கும் மன்னன். கற்பகம்: இரப்
போர்க்குவள்ளலெனக்கொடுக்கும் தெய்வத்தன்மை வாய்ந்த ஐந்தருவி
னுளொன்று. இம்மரங்கள் பாற்கடற்றோன்றிய அமுதுடன் பிறந்தவை "சந்
தானந்தேவதாரங் கற்பகம்-மந்தாரம் பாரிசாத மைந்தருவருக்கம்." "இம்
மரமைந்துந் தெய்வமரமென்ப." காமவல்லி = "கற்பகஞ்சேர் கொடிகாம
வல்லி"யாம். கற்பகம் மன்னற்கும், கொழுந்து காமவல்லிகள் மன்னனிரு
மனைவியர்க்கு முவமை. பயாபதி மன்னன் கற்பகம் போற் றன்னிலையிற் பிற
ழாது நின்று வள்ளன்மையுடையனாந் தன்மையையும், அவன் மனைவியர்,
கொழுந்தும் வல்லியுந் தாமணைந்த தருவையே சார்பாகப்பெற்று வளரு
மாபோல், அவனையே பற்றுக்கோடாக விழைந்து இன்னலரு சிறப்புற்ற
மையையுந் தெரிக்கும் உள்ளுறையுவம நயத்தைத் தெள்ளிதினுணர்க.
வாழ்க்கை: கை, தொழிற்பெயர் விகுதி. பேறு: பயன், தவப்பேறு: தவத்
தின்பயன். கற்பலோகம்: சுவர்க்கலோகம். பலபத்திரன்: பலராமன்;
வலிமையிற் சிறந்தோன் எனப்பொருள்படும்; இவன் வெண்ணிறமுடைய
னாதலை "வெண்பளிக்கு மேனியன்" என்பதனானுணர்க.

பக்கம்-4.

காயா: ஒருவகைமரம். கிருஷ்ணன்: கருநிறமுடையோன். கிருஷ்
ணம் என்றாற் கறுப்பு; இஃதிங்ஙனம் பொருள்படுதலைக் கருநாகத்தைக்
கிருஷ்ண சர்ப்பமென்றும் கருந்துளசியைக் கிருஷ்ண துளசியென்றும்
கூறுதலானு முணர்க. கிருஷ்ணன் என்னும் மொழியின் சிதைவே கண்
ணன் என்பதை யீண்டறிக. முகூர்த்தம்: வேளை. நாமகரணம்:
பெயரிடுஞ்சடங்கு. காளைப்பருவம்: இளமைப்பருவம்; "பாலைத்தலைவனுஞ்
சிறுவனுங்காளை" என்பதனானறிக. தம்மாட்டுப்பிணிப் புண்ணத்தக்க:
தம்மிடத்துக் கட்டுப்படத்தக்க. வயங்கினர்: விளங்கினார்கள். துயில்
ஒரீஇ: தூக்கம் நீங்கி; சொல்லிசை யளபெடையாம்; இதன் சாதாரண
ரூபம் ஒருவி. வழிபாடு: வணங்குதல்; வழிபடு என்னும் முதனிலை திரிந்த
தொழிற்பெயர். அரசவரிசை: அரசர்க்குரிய வரிசை; குடை, கொடி,
சாமரம், ஆலவட்டம், பரிவாரம் முதலியன. 'போய்' என்னும் வினையெச்
சம் பாட்டினிறுதியிலுள்ள புக்கான் என்பதைக் கொண்டுமுடியும்.

செய்யுள்.

உரை:—பளிங்கு: படிகக்கற்களை, ஒளி கதுவ: பிரகாசம் மிகும்படி
போழ்ந்த: பிளந்ததனாலாகிய, பலகை: பலகைகளை, கண்குலவ: இடம்
விளங்கும்படி, சேர்த்தி: பொருத்தி, விளங்கு ஒளி விளிம்பின் செம்பொன்:
விளங்குகின்ற ஒளியையுடைய விளிம்பிலே செம்பொன் பொருத்திய,

வேதிகை : மேடையினையும், வெள்ளிவேயுள் : வெள்ளித்தகடுகளாலமைந்த விதானத்தையும், துளங்கு ஒளி : அசைவதுபோல் விட்டுவிட்டு மிக்க காந்தியைப்பரப்பும், பவழத்திண்கால் : வலிய பவளக்கால்களையும், சுடர்மணி தவழும் பூமி : கிரணங்களைப் பரப்புமணிக ளழுத்திய அடியிடத்தையுமுடைய, வளம் கவின்று அனையதாய: செல்வப்பொருள் அழகியவடிவுடன் திகழ்ந்தாற்போன்ற, மண்டபம் மலியபுக்கான்: கொலுமண்டபம் விளங்குபடி உட்புகுந்தான்.

குறிப்பு :—படிகம் முதலிய கற்களையறுத்துச் சாணைபிடித்த பின்னரே அவற்றின் ஒளி இனிது விளங்குமாதலின் 'பளிங்கொளி கதுவப்போழ்ந் தபலகை'யென்றார். பளிங்கு: ஸ்படிகம் என்னும் வடசொற்சிதைவு. வேயுள்: மேற்கட்டி; விதானம்; தொழிலாகுபெயர், ஈண்டு, உள்-தொழிற்பெயர் விகுதி. பவழம் : ப்ரவாளம் என்னும் வடசொற்சிதைவு. கவின்று : இறந்தகால வினையெச்சம் ; கவின், பகுதி - எல்லாவளங்களுஞ் செறிந்த கொலுமண்டபமேயாயினும் மன்னனின்றேற் கவினின்றுமென்பார் 'மண்டபமலியப் புக்கான்' என்றார். 'மண்டபமலிரப்புக்கான்' என்று வேறுபாடங்காட்டுவாருமுளர். புக்கான் : பகுதி இரட்டித்திறந்த காலங்காட்டியது; ககரத்தை இறந்தகால விடைநிலையென்று சொல்வார் இலக்கணவிளக்க நூலார். புரோகிதன் : யாவற்றிற்கும் முன்வைக்கப்படுபவன் ; எனவே சுபாசுபங்க ளிரண்டனையும் முன்னிருந்து நடத்துபவன் ; இதங்களை (நன்மைகளை) முன்னறிந்து சொல்பவ னென்பாருமுளர். அருகாசனத்தினராயினர் : சமீபித்த இருக்கையராயினர்.

பக்கம் - 5.

விடுக்குதி : அனுப்புவாய். திரிகாலஞானம் : இறப்பெதிர்வு நிகழ்வென்னும் முக்காலங்களையு முணருமுணர்ச்சி. நிமித்திகன் : குறிசொல்வோன்; நிமித்தம் : குறி. கடை : வாயிற்கடை. கங்குல் : இரவு. விசும்பு: ஆகாயம் இழிதல் : இறங்குதல். விஞ்சை : வித்தை ; விஞ்சையராஜன் : வித்தியாதரமன்னன். திருமுகம் : ஓலை; கடிதம். புட்பமாகாண்டம் : பயாபதிமன்னனது நந்தவனம் ; மலர்களின் மிகுந்த கூட்டத்தையுடையதென்று பொருள்.

பக்கம் - 6.

வியப்பு : ஆச்சரியம். தகைமை : தன்மை. நாழிகைப்பறை : நாழிகை கழிந்ததைத் தெரிவிக்கும் வாத்தியம். மந்திரசாலை : ஆலோசனை செய்யுமிடம். அமாத்தியர் : அமைச்சர், மந்திரிகள் ; அருகிலிருப்பவர் என்று பொருள்படும் வடசொல் ; அமா : அண்மை. சம்பவம் : நிகழத்தக்கது.

ஏகசக்கிரேசுவரன் : தனியே ஆஜ்ஞாசக்கிரஞ்செலுத்தி அரசாள்பவன். ரேகை : கோடு. சங்கபாணியன் : பாஞ்பசன்னியமென்னுஞ் சங்கத்தைக் கையிலுடைய திருமால். சங்கை: சந்தேகம். நிகர் : ஒப்பு. பொழில்:சோலை. துருமகாந்தன் : மரங்களுக்கு விருப்பமானவன் என்றுபொருள் ; மரங்களைச்செழித்து வளரும்படி போற்றுபவன் என்பதுகருத்து.

பக்கம் - 7.

கல்கி : கொடுத்து. கோயில் : அரண்மனை ; இலக்கணப்போலி. உத்தியானம் : நந்தவனம்.

பக்கம் – 8.

இரத்நபுரச்சருக்கம் :—இரத்நபுரமென்னும், விஞ்சையர்புரியில் நிகழ்ந்தசெய்தியினைத் தெரிவிக்கும் பாகம்.

செய்யுள்.

உரை :—மஞ்சுதோய்வரை : மேகங்கள்வந்து படிகின்ற (உயர்ந்த) அம்மலையில், மைந்தரோடுஆடிய: காளையருடன் விளையாடிய, அஞ்சிலோதியர்: அழகிய பொன்வட்டத் தகட்டணிபொருந்திய கூந்தலையுடையமங்கையரது; ஆர் அளகம் : நிறைந்த முன்னெற்றிமயிரின்மேல் (பொருந்திய); பொடி : வாசனைப்பொடி, பஞ்சராகம் : ஐவகை நிறம்படைத்த இரத்தினங்களை, பதித்த : (பல்வேறுவிதமாய்ப்) பதித்த, பளிங்கு அறை : படிகத்தாலாகிய அறையிலே, அஞ்சு : பொருந்திக்கிடக்கும், பாறைகள் மேல் : கற்பாறைகளின்மேல், துதைவுற்றது : நிந்திமிக அடர்ந்து கிடந்தது."

குறிப்பு :—மஞ்சுதோய்வரை : தொடர்புயர்வு நவிற்சியணி ; இதனை வடநூலார் 'சம்பந்தாதிசயோக்தி யலங்காரம்' என்பர். அஞ்சிலோதி : அழகிய சிலவாணமயிரினையுடையாள் என்பர்நச்சினார்க்கினியர். இனிஅழகிய குளிர்ந்த கூந்தலையுடையாள் என்றுரைத்தலு மொன்று. ராகம் : நிறம். ஈண்டு நிறத்தையுடைய அரதனங்கட்கு ஆகுபெயர். பளிங்கு + அறை:பளிக்கறை; "மென்றொடர்மொழியுள்" என்னுஞ் சூத்திரத்தானமைக்க. "விளிப்பறை போகாது மெய்ப்புறத்திடூஉம், பளிக்கறை மண்டபம்" என்னும் மணிமேகலை யடிகளாற் பளிக்கறையியல்பை யீண்டறிக.

நாககன்னியர் : தேவமகளிர். நாகம் : விண்ணுலகம். "நாகம்விண் குரங்கு புன்னை நற்றூசுமலைபாம்பியானை." இனிப்பாதலத்துறையும் நாகச்சாதி மகளிரென்று கூறலுமொன்று. நறுநாற்றம் : நல்லவாசனை. கோடு-சிகரம். பொற்பிற்று : அழகுடையது. விலங்கல் :மலை; காரணப்பெயர், ஒரு பக்கல்விலகி நிற்பதென்று பொருள்படும். பெயரியது: பெயருடையது. ஈடு: உவமை.

பக்கம் - 9.

பெண்அணங்கு : தெய்வத்தன்மை வாய்ந்தபெண். ஏற்றம் : உயர்வு. பேதைப்பருவம் : ஐந்துமுதல் ஏழாண்டுவரையில், எட்டுமுதல் பதினொன்றளவும் பெதும்பைப்பருவம். சொயம்பிரபை : இயல்பில் ஒளியுடையாள். செவிலித்தாய் : வளர்க்குந்தாய். தாதி : 'தாசி' என்னும் வடசொற்றிரிவு; வேலைசெய்பவள் என்று பொருள்படும். இவர்ந்து : ஏறி. மனோவனம் : கண்டோர்மனத்தைக் கவர்வதென்று பொருள். மடவார் : இளமகளிர். மானும் : போலும். முருக்கிதழ் : பலாசம்பூவி னிதழ். உறழும் : ஒக்கும்.

பக்கம் - 10.

ஏய்க்கும் : போலும். இங்ஙனம் ஒக்கும் என்னும் பொருள்படும் பல சொற்கள் போந்தமையின் பொருட் பின்வரு நிலையணியாம். வர்ணியத்தை அவர்ணியமாகவும், அவர்ணியத்தை வர்ணியமாகவும் உபசரித்தமையிற் புகழ்பொருளுவமை யணியாம். வனப்பு : அழகு. கன்னி : மாலை. சினகரம் : கோயில், ஜினாலயம்; ஜினக்ருஹம் என்னும் வட

சொற்றிரிபு. பூப்பலி: பூவாகியபலி; கடவுட் பூசைக்குரியபொருள்; பிரதக்கணம்: வலமாகச்சுற்றிவருதல். இசைத்து: சொல்லி. நிருமாலியம்: உபயோகித்தமிகுதி. கபாடபந்தனம்: கதவுசாத்தல். திகம்பரர்: திக்கையேவஸ்திரமாகவுடையோர். சாரணர்: சமணமுனிவர்; தேவதூதரெனவுமாம். ஆகாயமார்க்கத்தில் சஞ்சரிப்பவரென்று பொருள்படும். இவர் எண்வகைப்படுவரென்பர் அடியார்க்கு நல்லார்; இவர்கள் இவ்விருவராகச் சென்று இவ்வுலகினர்க்குத் தருமோபதேசம் செய்வதியல்பு. சிலாதலம்: இந்திரகாந்தக்கற்பதித்த மேடை. சாரணர் வரவு கருதி ஜினாலயங்களில் அவர் தாமிருந்து கடவுட்பூசை செய்ய அமைத்தது என்பர். "ஐவகை நின்ற வருகத்தானத்துச், சந்திஐந்தும் தம்முடன் கூடி,வந்து தலைமயங்கிய வான் பெருமன்றத்துப், பொலம்பூம் பிண்டி நலங்கிளர் கொழுநிழல், நீரணி விழவினும் நெடுந்தேர் விழவினுஞ், சாரணர் வருஉந்தகுதி யுண்டாமென உலகநோன்பிகளொருங்குடனிட்ட, இலகொளிச்சிலாதலம்" என்பது சிலப்பதிகாரம் நாடுகாண்காதை. ஆசி: வாழ்த்து. இருத்தி: உட்காருவாய்.

பக்கம். 11.

வேண்டுகோள்: Request. திறம்: தன்மை. வாயில்: மார்க்கம். காட்சி: ஞானம். கிளர்ந்தது: பிரகாசித்தது. அநந்தரம்: பின்பு. நோற்க: இயற்ற. சங்கற்பித்தாள்: நிச்சயித்தாள். ஜகதபிநந்தனர்: உலகத்தை மகிழ்விப்பவர். ஜகநந்தனர் அபிநந்தனர் என்பவைதாமவர்கள் பெயர்கள். கசிய: ஒழுக. பாஷ்பம்: கண்ணீர்.

பக்கம். 12.

செய்யுள்.

1. உரை:—ஆதி அம்கடவுளே: யாவற்றிற்கும் முதன்மையாகிய அழகிய கடவுளாக வுள்ளாய்; அருமறை பயந்தனே: அருமையாய வேதங்களை யீந்தருளினாய்; போதி அம்கிழவனே: ஞானத்துக்கு உரிய இருப்பிடமாவாய்; பூமிசை யொதுங்கினே: தாமரைப்பூவின்மேற் சென்றருளினாய்; போதி அம்கிழவனே—, பூமிசை ஒதுங்கிய—, சேதி: செய்கையையுடைய, அம்செல்வ: அழகிய செல்வனே, நின் திரு அடி வணங்கினம்: உனது அழகிய பாதங்களை வணங்கினம்.

குறிப்பு:—அம்: சாரியை. போதி மரமெனின் புத்தனுக்குரித்தாதலின் ஈண்டுத் தகாமைகாண்க. அருகன் தாமரையின்மேல் ஊர்ந்து செல்பவன் என்பர் சைனர். சேதி: செய்தி யென்பதன் மரூஉ.

2. உரை:—காமனே கடிந்தனை - மதனை வென்றாய்; காலனே காய்ந்தனை: யமனைச்சயித்தாய்; தேமலர்மாரியை: தேன்மிகுந்த பூமழையைச் சொரியப்பெறுவாய்; திருமறு மார்பனே: அழகிய வடுக்களை யுடையமார்பையுடையாய்; தேமலர் மாரியை—, திருமறு மார்பனே—, மாமலர் வண்ணம் நின்மலர் அடிவணங்கினம்: சிறந்த தாமரைபோன்ற நினது பதமலர் வணங்கினம்.

குறிப்பு:—இதனானே அருகக் கடவுள் இவ்வுலகவின்பத்தை வெறுத்தவனென்றும் அழிவில்லாதவனென்றும் புலப்படும். இவன் மறுப்புனைந்திருக்

தலைச் "செம்பொன்வரைமேற் பசும்பொன் னெழுத் திட்டதேபோ, லம்பொற் பிதிர்வின் மறுவாயிரத் தெட்டணிந்து, வெம்புஞ் சுடரிற் சுடருந் திருமூர்த்தி" என்ற சிந்தாமணியின்கண் தேவருரையாலு முணர்க.

3. உரை:—ஆர் அருள் பயந்தனை : மிகுந்த கருணையைச் செய்தலுடையாய்; ஆழ் துயர் அவித்தனை : மிகுந்த துன்பத்தை நீக்கினாய்; ஓர் அருள் ஆழியை : ஒப்பற்ற கருணைக்குக் கடல்போன்றனை; உலகு உடை ஒருவனை : உலகமுழுதும் தனதென் றுடைய ஒப்பற்றவனாயிருக்கின்றனை; ஓர் அருள் ஆழியை,—உலகு உடை ஒருவனை—, சீர் அருள் மொழிய : சிறந்த (நினது) கருணைமொழிகளை (எமக்கு) அனுக்கிரகிக்கும் பொருட்டு, நின் திருவடி தொழுதனம் : உனது அழகிய பாதங்களை வணங்கினோம்.

குறிப்பு:—'ஓருளாழியை' யென்பதற்கு ஒப்பற்ற தரும சக்கரத்தையுடையவன் என்றும் பொருள் கூறலுமொன்று. இந்தக் கந்தருவ மார்க்கத்தால் இடைமடக்கின தேவபாணிக்கொச்சக வொரு போகின்கண் வந்த மடக்குக்கள் அன்பின் மிகுதி பற்றியாதலிற் கூறியது கூறலன்று.

பிரதாபம் = உயர்வு, மேன்மை. அருங்கலம் : அரிய ஆபரணம்.

வந்தல் : காளை. பேரவா : பெரியவிருப்பம். விடலை : ஆண்மகன்.

பக்கம் - 13.

செய்யுள்.

இவ்விரண்டடியும் சூளாமணிச்செய்யுளடிகளே.

உரை:—அந்தணர் ஒழுக்கமும் : மறையோர்து ஆசாரமும், அரசர் வாழ்க்கையும் : மன்னர் தம் செல்வவாழ்வும், மந்திரம் இல்லை எல் : மந்திரம் இல்லையாயின், மலரும் மாண்பு இல : நன்கு பரந்து விளங்கும் மாட்சிமையுடையா.

குறிப்பு:—மறையோர் ஆசாரத்திற்கு வேத மந்திரமும் அரச வாழ்க்கைக்கு ஆலோசனையும் இன்றியமையாப் பொருள்களாம். 'மந்திரம்' என்பச் செம்மொழிச்சிலேடை.

சொல்லேருழவர் : மந்திரிகள். இப்பெயர் இப்பொருளின்கண் திருக்குறளிலும் வந்துளது. (திருக்குறள் 872) சொற்கலப்பையா லுழுதற்றொழில் செய்பவர். உழவு என்டு அரசாட்சி.

பக்கம் - 14.

மூன்றாவது மந்திரசாலைச்சருக்கம்.

மந்திரசாலைச்சருக்கம் : ஆலோசனை சபையில் நடந்த செய்தியைப்பற்றிக்கூறும் பாகம். அவர்கள் : வேலாளர்; அங்ஙனே : அங்ஙனமே என்பதன் விகாரம்; அப்படியே. தேர்ச்சித்துணைவர் : மந்திரிமார்; தேர்ச்சி: ஆலோசனை. உழையர் : மந்திரிமார்; உழை - பக்கம்; அருகிலிருப்பவர் என்று பொருள்படும் அமாத்தியர் என்பதற் கொத்தபதம். முதுவர் : முதுமையுடையவர்; அறிவில் மூத்தவர். நண்ணிய : நட்பமான. நூலறிவினர் : சாஸ்திரஞானமுடையவர். அறிவினரன்று : இதைச்சிலர் வழுவென்பர், சிலர் வழுவமைதி யென்பர். ஆயினும் அல்லர் என்பது வழாநிலை. புலவர் : அறிவுடையோர்; புலம் : அறிவு. பிரபை : ஒளி. கோல் : செங்கோல்.

ஏனாதியர் : மந்திரிகள் ; ஏனாதி காவிதி முதலிய பட்டப்பெயர்கள் மன்னவன் தனது மந்திரி சேனாபதியர்க்கு அளிப்பது. நாகம் : நாகத்தடி. விதியா : மந்திரிமார் ; செய்வன தவிர்வன விதிப்பவர். நுண்ணியர் : நுட்பவறிவினோர். உசாவி : ஆலோசித்து. வாயில் : வழி. சூழ்ச்சி ; ஆலோசனை.

பக்கம்-15.

மணவாளன் : கணவன். இதன் பெண்பால் மணவாட்டி. நீடூழி : நீண்ட வாழ்க்காலமாகவும். இலகுக : விளங்குக. நாமம் : பெயர். குரவன் : பெரியோன். சூரியகாந்தம் : "சூரியனொளியாற் றீப்பொறி கால்வது சூரியகாந்த மெனப்பெயர் பெறுமே." சந்திரகாந்தம் : "சந்திரனொளியாற்றண்ணீர் கால்வது சந்திரகாந்த மெனப்பெயர் பெறுமே." உறுதிச் சுற்றம் : நன்மையைச் செய்யும் பந்துக்கள். கதுப்பு : கன்னம். மூர்த்தி : திருமேனிகொண்டவன்.

பக்கம்-16.

கிழவர் : புல்லர் ; கிழமென்னும் புல்லினையார். உழலும் : சூழலும். கர்க்கசமொழி : பயனில்மொழி. உத்தரதேசம் : விருதையர் நாட்டின் வடபாகம்.

செய்யுள்.

உரை :—மண்இயல் வாழ்நர்க்கு : பூமியில் பொருந்தி வாழ்பவர்க்கு, வான் உலகு ஒப்பது : விண்ணுலகை நிகர்ப்பது, புண்ணியம் இல்லார் : நல்வினையற்றோர், புகுதற்கு அரியது : சேர்தற் கருமையானது, கண்ணிய : மேலான, கற்பகக்கானம் கலந்தது : கற்பகச்சோலை விரவியது, விண் இயல் இன்பம் இனிது விரவிற்று : விண்ணுலக வின்பம் இனிமையாகப் பொருந்தியது. (அந்நகரம்)

குறிப்பு :—இஃது அடைமொழி மாற்றின்பாற் படும். கண்ணிய : 'கன்ய' என்னும் வடசொல்லின் 'கன்' 'இட' மெனக்கொண்டு இடமகன்ற என்றும், 'வினை' யெனக்கொண்டு யாவராலும் உயர்வாக நன்கு மதிக்கப்பட்ட என்னும் பொருள் கூறலாம்.

மயூரகண்டன் : மயிலினது கழுத்தைப்போன்ற கழுத்தை யுடையான். தானை : சேனை, ஆணை : ஆஞ்ஞை. திரிகாலசம்பவம் : முக்காலத்தும் நிகழ்பவை.

பக்கம்-17.

சீராய் : ஒழுங்காய். சகசம் : ஸஹஜம் ; இயற்கை. ஓச்சுவான் : செலுத்துவான்.

பக்கம். 18.

ஏந்தல் : அரசன். மேலைச்சார் : மேற்றிசைப்பக்கம். புரவி விஞ்சை : குதிரை செலுத்தும் வித்தை, இதனை அச்வஹிருதயம் என்பர். செம்மல் : அரசன் ; புதல்வனுமாம். செம்மல் - ஆண்பாற் சிறப்புப்பெயர். செம்மை யுடையான் என்பது பொருள். அமிர்தமாபதி : ஓர் நகர். வேகமாரதன் : வேகமாகச்செல்லும் பெரிய தேரையுடையான் என்பது பொருள். இளங்

களிப்புறுவலை: களிப்பினையுடைய இளம்புலி. மேகமாபுரம்: ஓர் நகர்; நாக மண்டலத்ததாய பரவிய பெரிய பட்டணம். பதுமரதன்: தாமரை போலும் வடிவமுடைய தேரையுடையான், தேரின் கொடிஞ்சியும் தாமரை வடிவமாயிருத்தலுங் காண்க. இனித்தாமரை மலரை வாகனமாகக்கொண்டவையான் வந்த பதுமரதன் என்னும் அருகக்கடவுளின் பெயர் இவனுக்கிடப்பட்ட தெனினுமாம். ஊழித்தீ: ஊழி காலத்திற்றோன்றி புவனையழிப்பதொரு நெருப்பு. இரத்தினபுரம்: ஒரு நகரம். இடியேறு: பேரிடி. சுவர்ணரதன்: பொற்றேருடையோன். செங்கண்மால்: சிவந்த கண்களையுடை விஷ்ணு. செயித்தற்கரிய: வெல்லுதற்கு அருமையான. அரிகண்டன்: ஒளி பொருந்திய கழுத்தையுடையான். சேய்: குமாரன்; இராசசிம்மம்: அரச சிங்கம்; அரசர்களுட் சிறந்தவன்; எல்லாப் பகையரசர்களையு மழிப்பவன். நந்தனன்: பிள்ளை. சயந்தன்: இந்திரன் மகன். மதலை: குமாரன். ஏமாங்கதன்: பொன்னாற் செய்த அங்கதத்தை யுடையான். மாறுக: எதிராக; காதலன்: மகன். திலதம்: நெற்றிப்பொட்டு. காளை: காளை போல்பவன் உவமையாகு பெயர். திருநிலையம்: ஒரு நகரம், திருமகள் வாழுமிடம் என்னும் செல்வ நிலைக்கப்பெற்ற தென்னும் பொருள்படும், ஸ்ரீநிலயம் என்னும் பெயர் பெறும். சித்திரரதன்: அழகிய தேருடையோன். செற்றவர்ச் செகுக்குஞ் செருவல்லான்: பகைத்தவரை யழிக்கும் போரில் வல்லவன். கான்முளை: மகன், சந்ததியிற் றோன்றியவன் என்பது பொருள். விஞ்சைய ருலகு: வித்தியாதர லோகம். மணவாளன்: கல்யாணஞ் செய்து கொள்வோன். மன்றல் புரிக: கல்யாணஞ்செய்க. பவச்சுதன்: சடியரசன் மந்திரி. பகர்ந்தான்: சொன்னான்;

பக்கம் - 19.

எஞ்சியோர்: மீதமுள்ளோர்; மற்றையோர்; எஞ்சுதல்-குறைதல். அஞ்ச லியல்வர்: கூடிப்பகைபர். இந்நங்கை: இப்பெண். புரக்கும்: ஆளும். உய்யும்: பிழைக்கும்; இங்கு கடைத்தேறும். வையகம்: பூமி: இஞ்ஞான்று: இக்காலத்தில். அஞர்: துன்பம். காம்பின் மென்றோளி: மூங்கில் போலும் மெல்லிய தோளையுடையாள். அன்னோன் மருமம் மருவுமாயின்: அத்தன்மையோன் மார்பை யணைவாளானால். ஆம்பல்: அல்லி. அலர்கதிர்த் திங்கள்: பிரகாசிக்கின்ற கிரணங்களை யுடைய சந்திரன். நற்குணாலயம்: நற்குணங்களுக்கு இருப்பிடம்.

செய்யுள்.

உரை:—நம்பிதங்கை-அரசனாகிய அவ்விச்சுவன்தங்கை [சோதிமாலை], நகை - ஒளிபொருந்திய, மலர் - மலர்களையுடைய, கற்பகக் கொம்பின் அன்னவள் - கற்பக விருக்ஷத்தின் கொம்பினைப் போல்வாள், கொங்கு அணி கூந்தலாள் - (இயற்கை) வாசனையைக்கொண்ட கூந்தலையுடையவள், அம்பின் நீண்டு-அம்பைப்போல் நீட்சிமைபெற்று, அரி சிந்திய-செவ்வரி பரவப்பெற்ற, மாகயல் - பெரிய கெண்டைமீன் பிறழுமாறு போலே, வம்பின் நீண்ட - புதுமையால் மிகுத்த, மை-மை எழுதிய, வாள் நெடுகண்ணினுள் - வாளாயுதம் போல் நீண்ட கண்களை யுடையவள்,

குறிப்பு:—வாடாமைக்கும், மலர்ச்சிக்கும், இன்பந்தருதற்கும், இயற்கைவாசனை யுடைமைக்கும் மலர் கற்பகக்கொம்பு உவமை; இனி, நகைமலர்

கற்பகக்கொம்பி னன்னவள் என்பதற்கு - ஒளியோடு பரவுகின்ற கற்பினை மணத்தே யுடைய பூங்கொம்பினை யொத்தவள் என்று கூறினுமாம். வம்பின் நீண்டமை - கூட்டுவாசனையா லதிசரித்தமை யெனினுமொக்கும். செவ்வரிபடர்ந் திருத்தல் உத்தமப் பெண்களின் இலக்கணம். வரி-இரேகை. வாளாயுதத்தை யண்கருக் கொப்பிடுதலின் ஆடவரை வருத்துந்தன்மை குறிக்கும்.

பக்கம் - 20.

செய்யுள்.

செய்யுளுரை:—கோதுஇல் மாலைகள்மேல் - குற்றமில்லாத பூமாலைகளின்மீது, குதிகொண்டெழு - குதித்தலைக்கொண்டு கிளம்புகின்ற, கீதம் மாலைய - சங்கீத ஒழுங்கினையுடைய, கின்னரம்-கின்னரம் என்னும் இசைக்கருவியின் இசையை, வண்டினம் - வண்டுக்கூட்டங்கள், ஊதி - (வாய்விட்) டொலித்து, மாலையவாய் - வரிசையாய், உறையும் - தங்கப்பெற்ற, குழல் - கூந்தலையுடைய, சோதிமாலையென்பாள் - சோதிமாலை யென்னும் பெயரினையுடையாள், சுடர்பூணினள் - பிரகாசிக்கின்ற ஆபரணங்களையுடைய அப்பெண்.

குறிப்பு:—இச்செய்யுட்கு வருக்கிப் பொருள்கூறலாரு முளர்.

அங்கனாரத்தினம்: பெண்களுக்குள் இரத்தினம்போலச் சிறந்தவள். வயோதிகன்: வயதில் அதிகமானவன், விருத்தாப்பியன் என்றபடி. வயஸ் × அதிகன். நினைக்குந்தகையன் அன்று: எண்ணுந் தகுதியுடையோனும் அல்லன். பெண்ணலங் கனிந் தொழுகாநின்ற: பெண்தன்மையின் அழகு கனிந்தொழுகாநின்ற, இனி நலம் நற்குணமாம். அண்ணலங்களிற்றரசன்: பெருமையுடைய அழகிய யானைபோன்ற அரசன். வதுவை: கல்யாணம். புரியாதிருப்பதும்: செய்யாதிருப்பதும். சுரேந்திரகாந்தம்: ஒருநகரம். கடவுளர்தன்மையன்: தேவர்களின் தன்மையுடையோன். சித்திரகூடம்: ஒருநமலை, அதிசயிக்கத்தக்க சித்திரங்களையுடையதென்று பொருள். அணிவிழவு அயர்த்து: அழகிய திருவிழாவைச் செய்வித்து. ஆண்டு: அவ்விடத்து. முன்: முற்பிறப்பில், பங்கயப்பழனவேலி: தாமரை மலர்களையுடைய வயல்கள் வேலியாகவுடைய. பவகிரிபுரவலன்: பவகிரியென்னு நகரத்தரசன். பயந்த: பெற்ற. மதம்பாயும்: மதஜலம்பாயும். சயசேனன்: வெற்றியுள்ள சேனையுடையோன். பிரிதிமதி: அன்புடையான் என்பதுபொருள். சாசாரம்: ஸஹஸ்ராம் என்னும் வடமொழிச் சிதைவு.

பக்கம் - 21.

கடல்தொகை: காலத்தின் வரையறை. இது உலகத்தைக் கடல்கொள்ளுவதைக் காலமாகக்கொண்டு 17 - கடற்றொகையென்று அளவிட்டதாகக் கொள்ளவேண்டும். அமரர்: தேவர்; மரணமில்லாதவர் என்பது பொருள். போகம்: இன்பம். நுகர்ந்தவன்: அநுபவித்தவன். வேண்டற்பாலன்: விரும்பும் பகுதியுடையோன். வார்பூட்டிய: தோற்கயிற்றாற் கட்டிய. வயிர்: ஊதுகொம்பு. வளை: சங்கு. குழாங்கள்: கூட்டங்கள். சண்டி: செருங்கி. நிமித்திகன்: சோதிடன்; வருங்கால மறிந்துரைப்போன்.

செய்யுளுரை :—இந்திரன் அனைய - தேவேந்திரனை யொத்த, நீரோய்-தன்மையையுடையோனே ! இனி பிறிது எண்ணல் வேண்டாம்-இனிவேறு ஆலோசித்தல் வேண்டுவதில்லை, மந்திரம் நீளுமாயின் - ஆலோசனை அதிகரிக்குமானால், வருவன - வருந்திங்குகள், அறியல் ஆகா - (இன்னதென்று) அறிய முடியா ; (ஆகலின்) சந்திரன் தவழ நீண்ட - (ஆகாயத்திற் செல்லும்) சந்திரன் தன்னிடத்தே தவழ்ந்து செல்லும்படி உயர்ந்த, தமனியம் சூலம் நெற்றி - பொன்னினாற் செய்த சூலங்களை நெற்றியிலே யுடைய [உச்சியிலுடைய], அந்தரம் திவளும் - ஆகாயத்தில் விட்டு விட்டுப் பிரகாசிக்கின்ற, ஞாயில் - மதில் சூழ்ந்த, கோயில் புக்கு அருளுக என்றார் - அந்தப்புரஞ்சென் றருளுவீராக வென்று சொன்னார் மந்திரிகள்.

குறிப்பு:—'அந்தரமயங்கும்' என்பதற்குத் தெய்வலோகத்தார் இத்தன்மையானதில்லையே யென்று மயங்கப்பெற்ற என்றும் பொருள் கூறுவர். ஞாயில் - சினையாகுபெயர். தமனியம் - தபனீயம் என்னும் வடமொழிச் சிதைவு; எரியில் தபிக்கப்பட்டுப் பொலிவது என்பது பொருள். அந்தரம் - ஆகாயம், பிறபொருளுக்கு இடவாகுபெயர்.

தேன் : வண்டின் பேதம். விண்டு இசைபாட : வாய்விட்டுப் பண்ணிசைபாட. ஆரவாரித்தல் : ஒலித்தல். அரமகளிர் : தேவமாதர் ; அமரமகளிர் என்பதன் விகாரம்.

பக்கம். 22.

கவரி : வெண் சாமரை. உச்சிக்காலம் : நடுப்பகல். கன்னலங்கருவி: நாழிகையை யறிவிக்கும் யந்திரம் ; கன்னல் - நாழிகை ; கடிகாயந்திரம் என்றும் கூறுவர். கொள்ளை கொள்ளையாய் : மிகுதி மிகுதியாய் ; தூவுதல்: இறைத்தல். பாதசாரியாய் : கால் நடையாய். போதலாயினன் : செல்லாயினான். வில்உமிழ் மணிக்கழல் : ஒளி வீசுகின்ற மணிகள் பதித்த வீரக்கழல். ஒல்லெனல் : ஒலிக்குறிப்பு. சரம்: மலர்மாலை. இரைந்தெழுந்தன: ஒலித்தெழுந்தன. மகரகுண்டலம் : சுறு மீன் வடிவமாகச் செய்தகாதணி. எஃகம் : வேல். வாளம் : கத்தி ; வடமொழி, ஈட்டி : எறிவேல். இருமருங்கு : இருபக்கம். கரும்பினும் இன்மொழி காரிகையார் : கரும்பு ரசத்தினு மினிய வார்த்தையையுடைய பெண்கள் ; காரிகை - அழகு; அதனையுடையார் காரிகையார். மருமலர் : வாசனையுள்ள மலர். சுண்ணம் : வாசனைப்பொடி ; கந்தப்பொடி. சாந்து : சந்தனம். பெரும் புயல்மாரி : பெரிய மேகம் பொழிகின்ற மழை. மாடநீள் மந்திர மலியப்புக்கனன் : உபரிகைகள் உயர்ந்த கிருகம் விளங்கப் புகுந்தனன். அருளி : அருள் செய்து. கொங்கலர் தெரியலாய் : தேன் நிறைந்துள்ள அழகிய மாலையுடையானே ! கொங்கு-வாசனையுமாம் ; அல் சாரியை ; அம்-அழகு; "கொங்கலர், தெரியலாய்" என்பது செய்யுள். கொற்றம் : வெற்றி. கொள்க என : பெறுக என்று; இதில் ஈறு தொகுத்தல் விகாரம். உழையர் : பக்கத்துள்ளார்; உழைஞர் என்பது ; பரிசனங்கள். வல்லைபம். வல்லமை ; நுவல்கின்றான் : சொல்கின்றான்.

பக்கம் - 23.

பெண்கொடி : கொடிபோன்ற பெண். வலங்கொண்டு : வலமிட்டு; ப்ரதக்ஷிணமாக. இலக்குமி : திருமகள். சுபகாரியம் : நற்காரியம். சம்புத்தீவு : நாவலந்தீவு; இத்தீவு நாவல் மரத்தால் இப்பெயர் பெற்றது. கண்டம் : பகுதி, பிரிவு. வகுத்து : வகைப்படுத்தி. பரத கண்டம் - பரதன் என்பவன் அரசாண்டமையின் இப்பெயர் பெற்றது; நவகண்டங்களில் ஒன்று; இந்தியாவிற்கு இப்பெயர் வழங்கும். நவகண்டங்களாவன : கீழ்விதேகம், மேல்விதேகம், வடவிதேகம், தென்விதேகம், வடவிரோபதம், தென்விரோபதம், வடபரதம், தென்பரதம், மத்திமகண்டம் என்பன. போக பூமி : இன்பநுகரும்பூமி. பிரபஞ்சம் : உலகம். ஊழி : முடிவுகாலம். மன்னுயிர்கள் துயர் பலவுங்கெட : நிலைபெற்ற உயிர்களுடைய பல துன்பங்களுங்கெட. பிற்காலம் நிகழ்வனவற்றை : தனக்குப்பின்வரும் காலத்தில் நடக்கும் சங்கதிகளை. மாற்றலர் : சத்துருக்கள்.

பக்கம் - 24.

அவதரிப்பான் : உதிப்பான். பசுயிர் : பசியஉயிர். நுகர்ந்து : குடித்து. ஆழி : ஆஜ்ஞா சக்கரம். சாற்றப்படுதல் : சொல்லப்படுதல். சிரகண்டிதம் : சிரத்தைக்கண்டித்தல். உத்தரதக்கிணசேடிகள் : வடக்குத்தெற்குப் பக்கங்கள். சியம் : சிங்கம். அறிகுதி : அறிவாய். அகம் : வீடு.

பக்கம் - 25.

செய்யுள்.

I. உரை :—இளமலர் - இளமைபொருந்திய புஷ்பங்கள் [அன்றலர்ந்த மலர்கள் என்றபடி], தொக்குநுழைவுஇலாத - சேர்ந்து நெருங்கியிராத, சோலையும் - மரச்சோலைகளும், இளமைதாமரை - இளமைபொருந்திய தாமரைகள், புக்கு - பொருந்தி, நகாத - மலராத, பொய்கையும் - தடாகமும், மிக்கு - ஒளிமிகுந்து, இளம்பிறை - இளமையான பிறைச்சந்திரன், விசும்புஇலாதஅந்தியும் - ஆகாயத்தில் உடையதாகாத அந்திப்பொழுதும், மக்களைஇலாத - குழந்தைகளையுடையதாகாத, ஓர்மனையும் - ஒருவீடும், ஒக்கும் - தம்முள் ஒத்திருக்கும்.

குறிப்பு :—சோலைக்கு மலரும், பொய்கைக்குத் தாமரையும், அந்திப்பொழுதுக்குப் பிறையும் பொலிவுண்டாக்குதல்போல, மக்கள் மனைக்குப் பொலிவுண்டாக்குவ ரென்பதுகருத்து.

II. உரை :—தலைமகன் - கணவன், தனக்குத்தாள் ஆக - தனக்கு அடிமரமாகவும், நிலைமை கொள் மனைவி - உறுதியைக் கொண்ட மனைவியானவள், சாகையாக - கிளைகளாகவும், நலம் மிகுமக்கள் - நன்மை மிகுந்த மக்கள், நிமிர்த்த பூதுணர் ஆக - சிறந்து மலர்ந்து பொலிகின்ற பூங்கொத்துக்களாகவும், முதியர் - பெரியோர்கள், தேன்களா - தேன்களாகவும், குலம்மிகு கற்பகம் - (ஒப்பற்ற) குலமாகிய சிறப்பினையுடைய கற்பகமரமானது, குளிர்ந்து தோன்றும் - இன்புற்று விளங்கும்.

குறிப்பு :—தாள் - அடிமரம், கற்பகம் - கற்பினை யகத்தேயுடையதோர் மரம் என்று இல்வாழ்க்கையைச் சிலேடை வகையாற் கூறினர். குளிர்ச்சியாவது வெப்ப மின்றித் தட்பமாயிருத்தல். இச்செய்யுள் உருவகவணி.

III. **உரை** :—துகள் இலா - குற்றமில்லாத, சுடர்மணி - பிரகாசிக்கின்ற இரத்தினங்கள், அரும்பும்-அசையும், பூணினாய் - ஆபரணங்களுடையாளே! தகளிவாய் - அகலில் (உள்ள), கொழுசுடர் - கொழுவிய சுடரானது, தனித்தும் - தனியாயிருந்தும், கோழ் இருள் நிகளம் - கொழுந்த இருளாகிய விலங்கினை, வாய்பிளந்து - வாயின்கட் பிளந்து, அகம் - (தானிருக்கும்), இடத்தை, சுடர நிற்கும் - பிரகாசிப்பித்துக் கொண்டிருக்கும்; (அதுபோல) மகள்-நின்மகள், எல்லாத்திசைகளும் - எல்லாத்திக்குக்களிலும், ஒளிர - விளங்க, மன்னினாள் - நின்றாள்.

குறிப்பு :—விளக்கொளிபோலும் விளக்கத்தை யுடையாள் நின்மகள் என்பது கருத்து. இச்செய்யுள் **எடுத்துக்காட்டுவமை**. தனித்தும் - பல சுடரினோடன்றித் தனியாயிருந்தாலு மென்றபடி. நிகளம்-வடமொழி; செலவிற்குத் தடையுண்டாதலின் இருள் நிகளமாயிற்று.

IV. நாமநீர் - அச்சத்தை உண்டாக்குகிற நீராகிய கடலிலே (சஞ்சரிக்கின்ற), வலம்புரிவயிற்றிடை - வலம்புரி யென்னும் சங்கத்தின் வயிற்றில், பிறந்த - உதித்த, மாமணி-பெரிய முத்தானது, நலம்புரி பவித்திரம் ஆகும்-நன்மையைச்செய்கின்ற பரிசுத்தகுண முடையதாகும்; (அதுபோல), பொலம்புரி - அழகைச் செய்கின்ற, மயில் அனாய் - மயில் போலுஞ் சாயலுடையாளே! பயந்த - நீபெற்ற, பூங்கொடி - பெண்ணும், குலம்புரிந்தவர்க்கு எலாம் - குலத்திற் பொருந்தியவர்க்கு எல்லாம், கோலம் ஆகும்-அழகினைத் தருவதாகும்.

குறிப்பு :—பொலம்புரி யென்பதற்குப் பொன்னாற்செய்த எனினுமாம். **இச்செய்யுள் எடுத்துக்காட்டுவமையணி.** பவித்திரம்-வடமொழி.

V. மாவினை மருட்டிய - (ஒத்த பிளவினையுடைய) மாவடுவை (தனக் குவமையாகாதபடி) அஞ்சும்படி செய்த, நோக்கி - பார்வையை யுடையாளே! நின்மகள் - நின்புதல்வி, பூவினுள் - தாமரைப்பூவி லிருக்கின்ற, மடந்தை - திருமகளும், பொன் - அழகிய, பூவை - காயாமலரின், நாள் ஒளி - புதிய நீல வொளிபோலுந் திருமேனியுடைய, தேவனுக்கு - திருமாலுக்கு, அமிர்தமாம் - (அநுபவிக்கத்தரும்) அமிர்தமும் ஆகிய, தெய்வம் ஆம் என - தெய்வம் ஆவாளென்று, ஓவில் - நீங்குதலில்லாத, நூல் - சாஸ்திர ஆராய்ச்சியையுடைய, புரோகிதன்-நிமித்திகனாகிய புரோகிதன், உணர ஓதினான் - தெரியக்கூறினான்.

குறிப்பு :—மாவடுவையும், அதன் பிளப்பையும் பெண்கள் கண்களுக்கு உவமையாகக் கூறுதலின் இங்கு மாவினை என்றதற்கு அதன் பிளப்பினைக் கூறினாம்; வடுவென்றே பொருள் கூறினுமாம்; "மாவியன்றன்ன மென்னோக்கி" என்றும், "வடிக்கண்ணிவை" என்றுந் **திருக்கோவையாரி**லுங் காண்க; வடி - மாம்பிஞ்சு. நோக்கியாகிய நின் மகள் என்று மகளுக்கு அடை மொழியாக்கியும் கூறுவர். பூ - ஈண்டு மடந்தை யென்னுங் குறிப்

பால் தாமரையை யுணர்த்திற்று; அன்றிப் "பூவெனப்படுவது பொறிவாழ் பூவே" என்றுங் கூறியவாற்றாலும் தாமரையையே யுணர்த்திற்றென்க. பூவை யென்பது காயா; அதன் மலருக்கு முதலாகுபெயர்; அது நீல நிறமாதலின் திருமேனிக்கு உவமமாயிற்று; "செங்கை - யங்கதிராழியான் போல லர்ந்தன விரிந்தகாயா" என்றார் திருவிளையாடற்புராணத்தும். புரோகிதன் - வடமொழி.

வாயுவேகை-சடியரசன்மனைவி. உவகை-மகிழ்ச்சி.

ஒளி முகிழ் முத்தொத்து: பிரகாசத்தைக் குவிக்கின்ற முத்தை யொத்து; நகை: சிரிப்பு.

பக்கம்-26.

புட்பசயனம்: பூக்களாற்செய்த படுக்கை. பாயல் கொண்டு: படுத்து - துயின்று. திரு: மேன்மை. மாட்டு: இடத்தில். வரலாறு: வரன்முறை. தேற்றினர்: தெளிவித்தார். திருமுகம்: கடிதம். வரைந்து: எழுதி; ஆவனவற்றையும்: ஆகவேண்டிய காரியங்களையும். அடியிணை: இரண்டு பாதங்கள். விசும்பாறாக: ஆகாயமார்க்கமாக.

பக்கம்-27.

தூதுவிடு சருக்கம்.

மரீசி என்பவனை பயாபதி யரசனிடம் சடியரசன் தூதனுப்பிய பாகத்தைக் கூறுவது. மருகமழ: வாசனை வீச; தேன்மாரி: தேன் மழை. அக்காவினகத்து: அச்சோலையி னுள்ளிடத்து. மலர் மலிந்து: மலர் நிறைந்து. வகுளம்: மகிழமரம். தேமா: தித்திப்பாகிய மாமரம், தேன்மா மரம் எனவுங்கூறுவர்; அதற்குத் தேன்போலு மினிமையையுடைய மாமரம் என்று பொருள் கொள்க. நாகம்: சுரபுன்னை மரம். புன்கு: புன்க மரம். குரா: குரா என்னு மோர்மரம்; குரவம், குரவு, குர எனப்பெயர் பெறும். மரா: கடம்ப மரம் வெண்கடம்பு மரம்; "பராரை மரா" என்பது திருமுருகாற்றுப்படை; பாதவம்: மரம்; அடியால் நீரைக்குடிப்பது என்பது பொருள்; இது வடமொழி. மேதகவு: மேம்பாடு. அனிச்சம்: மோப்பினுங் கொடினுங் குழையும் தன்மையுடைய பூஞ்செடி; இதனை மரமென்று மயங்குவர். மாதவி: குருக்கத்தி. கொகுடி ஓடை; இவை பூங்கொடிகள்; தட்பம்: குளிர்ச்சி. ஒட்பம்: ஒளி. பொய்கை: தடாகம். மனோக்கியம்: மனதை மகிழ்வித்தல்; இது மனோஜ்ஞம் என்னும் வடமொழிச்சிதைவு. பொருகின்ற: மோதுகின்ற. திவலை: நீர்த்துளி; சீகரம் என்றும் பெயர். பனிநீர்: குளிர்ந்த வாசனை நீர். திவலைப்பனிநீர் இருபெயரொட்டுப் பண்புத்தொகை; திவலையாகிய பனிநீர் என விரியும். திரைக்கரம்: அலைகளாகிய கைகள். வியல்: பெரிய. சுரும்பு: வண்டு. அரும்பண்: அரியராகம். பிண்டி; அசோகமரம். அன்னோன்: அவன். இயற்றப்பட்ட: செய்யப்பட்ட. தூய்; அவி. மேடை: சிலாதலம். அடிகள்: தெய்வம். வீற்றிருத்தற்கு: எழுந்தருளியிருத்தற்கு.

பக்கம் - 28.

பொழில்: சோலை. அங்கத புரோகிதன்: அங்கதனென்னும் பெயருடைய புரோகிதன்; நிமித்திகன். இவர்ந்திருந்தனன்: ஏறி வீற்றிருந்தான்.

வழியிளைப்பு : வழிவந்த வருத்தம். நடனம் : நாட்டியம். கீதம் : பாடல்கள். ஆற்றுமின் : நீக்குமின். கணிகையர் : வேசையர்; நாட்டியப்பெண்கள். பவனி : உல்லாசமாய்வருதல்; வருதலின் சிறப்பு. அமரருலகு : தேவருலகு. அமரமாதர் : தேவஸ்திரீகள். மடவார் : பெண்கள். ஒற்கம் : அடக்கம். நுகர்வித்தார்கள் : உண்பித்தார்கள்.

பக்கம் - 29.

கொண்மூ : மேகம்; கருங்கொண்மூப் போலும் நிறமுடையான் திவிட்டன் என்க. ஆரோகணித்தல் : ஏறல். வாமம் : இடப்பக்கம். பல்லாண்டு : மங்களவாழ்த்து; அஃதாவது, இவ்வாறே பல வருஷங்களாக வாழ்ந்திருத்தல் வேண்டுமெனல். கெழும : விளங்க; கூடவர. அண்மினார் : சமீபித்தார்.

செய்யுள்.

உரை :—பல் இயம் குழாம் - பலவாத்தியங்களின் தொகுதிகள், ஆர்த்த - சப்தித்தன; குஞ்சரக்குழாம் - யானைக்கூட்டங்கள், அதிர்த்த - சப்தித்தன; வீரர் தேர்குழாம் - வீரர்கள் ஏறிவருகின்ற தேர்க்கூட்டங்கள், தேர்த்த - (தம் வரவை ஒலியால்) தெரிவித்தன; பல சனக்குழாம் - பல ஜனங்களின் கூட்டங்கள், திசைத்த - திக்குக்களில் நிறைந்தன; சாமரம் குழாம் - வெண்சாமரைத் தொகுதிகள், [illegible] - எங்கும் நிறைந்தன; வெண்கொடி குழாம் - வெண்ணிறம் பொருந்திய கொடிக்கூட்டங்கள், புதைத்த - நெருங்கி நிறைந்தன; வேந்தர் பல்குழாம் - பல அரசர்களின் கூட்டம், வேர்த்த - (நெருக்கத்தினால்) வேர்த்துப்போயின; கூந்தல்மாகுழாம் - புறமயிர்களையுடைய குதிரைக்கூட்டங்கள், விரைந்த - விரைவாக வந்தன.

அஞ்சலி : கைகூப்புதல். குரவர் : ஆசிரியர். ஒரீஇ : விட்டு. மரீஇய - பொருந்திய.

பக்கம் - 30.

பூருவஜனனம் : முற்பிறப்பு. கையாறு : கவலை; இவாயின : ஏறுங்கள். துரியம் : வாத்தியம். கோஷிக்க : சப்திக்க. சுண்ணம் : பொடி. நாற்றி : தொங்கவிட்டு. ஒப்பனை செய்த நீர்மையான் : அலங்காரம் செய்த தன்மையால். அருவி தூங்கும் குளிர்மணிக் குன்றம் : அருவிகள் விழுகின்ற குளிர்ந்த மணிகளை யுடையமலை. அநுமதி : உத்தரவு. கல்நவில் தோளினான் : மலையென் றுவமை சொல்லப்படும் தோளையுடையவன்; மலையொடு பயின்றதோளுமாம். அம்பரசரன் : ஆகாயத்திற் சஞ்சரிப்பவன்; அம்பரம்-ஆகாயம், சரன் - சரிப்பவன். லேககன் : எழுதுவோன். திருமுகப்பாசுரம் : ஓலையில் எழுதப்பட்ட சொற்றொடர்.

பக்கம் - 31.

மன்பதை : ஜனங்கள். பிரமித்து : மயங்கி. நரபதி : அரசன் - மனிதர்களுக்குத் தலைவன். நிகர் : ஒப்பு. சுவை : ருசி.

பக்கம் - 32.

பொள்ளல்யாக்கை : குற்றமுள்ள சரீரம்; ஒன்பான்றுளையுடைய உடலுமாம்; யாக்கை - தொழிலாகுபெயர்; எங்ஙன் : எப்படி; ஒழுகிய ;

நடந்த; அழுங்கிய : அமிழ்ந்த ; வருந்திய. பாலதோ : பாகுபாடுடையதோ. மேம்பாடு: மேன்மை. நித்தியமறவி : தினந்தோறும் மறதியையே அதிகமாகக்கொண்டிருத்தல். உழந்து : அலைந்து. ஆற்றல் : வல்லமை. அஃது அட : அவ்வியானையழித்தலால். குழை : தழை. கயந்தலை : யானைக்கன்று ; கயம் - இளமை எம்மவர் மகத்துவம்: எங்கள் ஜாதியாரது மகிமை. வரங்கிடத்தல் : தாம் வேண்டிய வரத்தைப்பெறத்தவம் செய்தல் ; இரசதம். வெள்ளி. கிரி : மலை. கழறினன் : சொன்னான். வாளாவிருத்தல் : ஒன்றும் பேசாதிருத்தல். சினவற்க : கோபியா திருப்பாயாக.

பக்கம் - 33.

பூபன் : அரசன் ; பூமிக்குத்தலைவன். குரூரவார்த்தைகள் : கொடிய வார்த்தைகள். வித்தை : வித்தை. உதித்தவன் : பிறந்தவன். கலைமகள் பொருவும் : சரஸ்வதியை ஒக்கும். பெருமகள் : தாய். வயிரதிலதம் : வயிரத்துள் திலதம் போற் சிரேஷ்டமான வயிரம். நம்பெருமான் : நமது கடவுள். திருவடியொழுகி : சீர் பாதங்களிற் பத்திசெய்து நடந்து.

பக்கம் - 34.

உதாசினன் : லட்சியமில்லாதவன் ; பராமுகன். அறக்கடவுள் : தருமமூர்த்தியாகிய தேவன் ; [illegible] அருகக்கடவுள் ; தியானச்சோதி : தியானஞ்செய்வதிற் காணப்படும் தெய்வவொளி.

செய்யுள்.

I. உரை :—அறம்-தரும சொரூபியாகிய, வேந்தே-தலைவனே ! அலகு இலா - அளவில்லாத, ஞானத்து - அறிவால், உலகு எலாம் - எல்லா உலகங்களையும், அகத்து அடங்க - உள்ளே அடங்கும்படி, நுங்கி - விழுங்கி, நின்னுள் - உன்னிடத்தில், ஒளித்தாயும் - ஒளித்தவனும், நீயே, ஒளித்தாயும் நீயே—; உயிர்க்கு எலாம் - எல்லா வுயிர்களுக்கும், கண்ணாய் - கண்போன்று, அளித்தாயும் - படைத்தவனும், காத்தாயும் - காப்பாற்றினவனும், நீயே - நீதான் ; (ஆதலின்) வாழி - வாழ்ந்திருப்பாயாக.

குறிப்பு :—ஞானத்தால் என்று மூன்றனுருபு நுங்கி என்னும் எச்சவினையையும் அவ்வெச்சம் ஒளித்தாயு மென்னும் வினையாலணையும்பெயரையுங் கொள்ளும். அந்தஞானம் என்றற்கு அலகிலா ஞானம் என்றார். திரிமூர்த்திகளுக்கும் தலைமையானவர் அருகக்கடவுள் என்பது அம்மதத்தார் கொள்கை. வாழிய என்னும் வியங்கோள் வாழி எனக் கடைகுறைந்து நின்றது. "வாழியவென்பத னீற்றி னுயிர்மெய் கெலுமுரித்தஃதேகினு மியல்பே" என்பது சூத்திரம்.

II. உரை :—திருமாலே - திருமாலென்னும்பெயரை யுடையவனே ! அழல் நாறும் - வெப்பத்தை வீசுகின்ற, வெங்கதிரோன் - சூரியன், நாண - வெட்கங் கொள்ளும்படி, அலராது - (அச்சூரியனைப் போல் உஷ்ணத்தோடு ஒளி) பரவாமல், நிழல்நாறும் - குளிர்ச்சியாகிய ஒளியை வீசும், மூர்த்தியாய் நின்றாயும் நீயே - வடிவுடையவனுமாய் நின்றவனும் நீதான ; நின்றாயு நீயே—, நிறைபொருள்—(குறைவின்றி) நிறைந்த பொருள்களையுடைய, எல்லைகண் - முத்தியுலகில், சென்றாயும் சென்றவனும் வென்றாயும் - வெற்றி கொண்டவனும், நீயே - நீதான், (ஆதலின்) வாழி - வாழ்ந்திருப்பாயாக.

குறிப்பு :—எல்லை - உலகு ; நிறைபொருளெல்லை யென்றமையின் முத்தியுலகாயிற்று. நிழல் - குளிர்ந்த ஒளி.

III. உரை :—நிறைதரு கேவலத்தோய் - நிறைந்த கேவலமென்னும் ஒப்பற்ற ஞான உணர்ச்சியுடையோனே ! வென்ற பெருமானே - (யாவற்றையும்) வெற்றிகொண்ட பெருமை யுடையோனே ! நின் அடியார்க்கு எல்லாம் - நினதடியவர் யாவர்க்கும், குறைதலில் இன்பம் கொடுப்பாயும் நீயே- குறைவில்லாத இன்பத்தைக் கொடுப்பவனும் நீதான் ; கொடுப்பாயும் நீயே—. குறு ஏவல்வேண்டாய் - (யான்செய்யும்) சிறியதிருவடித் தொண்டையும் வேண்டாமல், விடுத்தாயும் - விடுத்தவனும், நீத்தாயும் - (பற்றுக்களெல்லாவற்றையும்) ஒழித்தவனும், நீயே—.

குறிப்பு :—திருவடித்தொண்டை நோக்கி அது காரணமாக அருள் செய்தலின்றித் தனது வரம்பி லருளாலேயே அருளுகின்றமையின், 'குற்றேவல் வேண்டாய்' என்றான்.

இம்மூன்று செய்யுளும் இடைமடக்கி வந்த கந்தர்வமார்க்கம். இடைமடக்காவது ஒளித்தாய் முதலியன மீண்டு மடக்கி வந்தன காண்க.

குறிஞ்சி : ஓர்பண். வணங்குதல் நாணத்தால் தலைசாய்த்தல் அல்லது குறிஞ்சியும் இசைதற்கிசை என்பதற்குச் செம்கேட்ட மலைகளும் இளகிவணங்கின எனினுமாம்; பிறிதுபொருளுங் கூறுவர். வாகாய் : அழகாய். அம்பர் : ஆகாயம்; அம்பரம் வடமொழி. தம்பித்தல் : அசையாது நிற்றல். கின்னரர் : ஒருதேவவகுப்பைச் சேர்ந்தவர். போனகம் : உணவு. சாறுமிழ்தம் : இசையாகிய அமிழ்தம். பன்னகலோகம் : நாகலோகம். பணமுடி : படங்களோடு கூடிய தலை.

பக்கம் - 35.

வேண்டினர் வேண்டியாங்கு : விரும்பினோர் விரும்பியபடி. எய்தினன் ; சென்றான். நமிகுலம் - நமி என்பவன் வம்சம். நிகர்ப்பீர் : ஒத்திருப்பீர். தொடர்பு : தொடர்ச்சி. கூறுவல் : சொல்வேன். பொதி : அலையாளம் ; இதனால் திருமகட்குப் பொதி என்றொரு பெயருண்டு ; மேவுவான் : பொருந்த; இது வான்வாய்ப்பாட்டு வினையெச்சம். அவன் "என்று சுட்டியது" கடவுளை. மரகதம் : பச்சை. இலங்குதல் : விளங்குதல். வாகுவலி ; தோள்வலி யுடையோன்,

பக்கம் - 36.

ஓம்பி : காத்து. இறைத்தொழில் : அரசாட்சி செய்யுந் தொழில். தியானக்கினி : தியானவொளி. பயில : வசிக்க. வல்லிகள் : கொடிகள். பொழில் மரக்கண் : சோலையின் கணுள்ள மரத்தில். கோழரை : வழுவழுப்பான அரை ; அரை - அடிமரம். வழுவழுப்பாகிய அரையை யுடைய மரங்களைக் கோழரை யென்றும், பொருக்கான அரைகளையுடைய மரங்களைப் பொரியரை மரமென்றும் சொல்லப்படும். குஞ்சி : சிகை ; ஆண்மயிர். இருகுடித்தொடர் : இரண்டு குலங்களின் சம்பந்தம் ; வம்சபரம்பரை. கேசரன் : வித்தியதரன் ; கே - ஆகாயம், சரன் - சஞ்சரிப்பவன். கின்னிகர்வார் : கின்னரை யொப்பவர்.

பக்கம் - 37.

சூழ்ச்சி : ஆராய்ச்சி. என்னென்று : யாதென்று. அறிவுகொளுத்தல் : அறிவுபுகட்டல். தரிக்கச்செய்து : தங்கச்செய்து.

பக்கம் - 38.

சீயவதைச் சருக்கம்.

திவிட்டனென்பவன் பகைவர் தன்னிடத்தனுப்பிய மாயச் சிங்கத்தை வதைத்த சங்கதியைக் குறிக்கும் பாகம். சீயம்-சிம்ஹம் என்னும் வடசொல் விகாரம். கைச்சமிக்ஞை : கைக்குறிப்பு, ஸம்ஜ்ஞா என்னும் வடமொழிச் சிதைவு. பொலிவினால் : விளக்கத்தினால். அநுமித்தல் : ஊகித்தறிதல்; அநுமானித்தல்; அநுமானமாவது புகையைக் கண்டவிடத்து நெருப்புண்டென்று ஊகித்தல் ; இஃது அளவைப் பிரமாணங்களிலொன்று. இரைத்தாக : சப்தித்து மேல்விழ. வண்சிறை : பெரிய இறகு ; வளப்பம் பொருந்திய சிறகுகள். வளப்பம் - அழகு. நித்திலம் : முத்து. வெள்ளி வேய்ந்த பத்திகள் : வெள்ளியால் வேயப்பட்ட வரிசைகள் ; வேய்தல் - மேல்மூடுதல். வேதிகை : மேடை. பிண்டி : அசோகமரம். நிழல் : ஒளி. வீற்றுவைகுக : மிக்கசிறப்பொடுந் தங்குக ; புகன்று : சொல்லி : துதித்துமாம். அணங்கு அனையார் : தெய்வப் பெண்களையொத்த பெண்கள்; அணங்கு-திருமகளுமாம். அஷ்டமங்கலம் : எட்டுமங்கலப் பொருள்கள் ; அவையாவன : சாமரம், தீபம், நிறைகுடம், இணைக்கயல், கண்ணாடி, அங்குசம், கொடி. முரசம் என்பன. சோடசோபசாரம்: பதினாறுவகை யுபசாரம்; அவை;—தவிசளித்தல், கைகழுவ நீர்தரல், கால்கழுவ நீர்தரல், முக்குடி நீர்தரல், நீராட்டல், ஆடைசாத்தல், முப்புரிநூல்தரல், தெய்வை பூசல், மலர் சாத்தல், மஞ்சளரிசி தூவல், நறும் புகைகாட்டல், விளக்கிடல், கற்பூரமேற்றல், அமுதமேந்தல், அடைக்காய்தரல், மந்திர மலரான் அருச்சித்தல் என்பன ; இவற்றை முறையே ஆசனம், அர்க்கியம், பாத்தியம், ஆசமனீயம் ஸ்நானம், வஸ்திரம், யஜ்ஞோபவீதம், கந்தம், புஷ்பம், சோபஞக்ஷதை, தூபம், தீபம், கர்ப்பூரதீபம், அன்னம், தாம்பூலம், மந்திரபுஷ்பம் என்பர் வடநூலார். ஷட்+தச-சோடச என்பது வடமொழிச்சந்தி. இளங்கருங்கைம்மா : இளமை பொருந்திய கரிய துதிக்கையையுடைய யானை, தளம் தரும்மொய்வெரிந் : பருமை அமைந்த வலியுள்ள முதுகு.

பக்கம் - 39.

இறை : அரசன். பொன்னிறப்பொறி : பொன்னின் நிறத்தாலமைந்த முத்திரை ; இலச்சினையெனவும் படும். திருமுகம் : ஓலை. விம்மிதம் : பிரமித்தல்; நினையாதிருக்கையில் வருவதோரானந்தம் ; விஸ்மிதம் என்னும் வடசொற்சிதைவு. மோனி : மௌனி. பேசாதிருத்தல். மெய்ந்நிலை : உண்மைநிலை. பொற்குவால் : பொன்குவியல் ; சுவர்ணத்திரள். அருங்கலம் : விலையுயர்ந்த ஆபரணம். புண்ணியம் புணர்த்தவா : புண்ணியங்கூடியவிதம்.

பக்கம் - 39.

இறப்ப : மிக. உசாவ : வினவ ; விசாரிக்க. அவதி : காலம்.

பக்கம் - 40.

வதுவை : கல்யாணம். நிலமடந்தை : பூதேவி. ஊடி : கோபித்து அற்றம் : சமயம். உட்பகை : காமம் முதலியன ; அவை-காமம், கோபம், லோபம், மோகம், மதம், மாற்சரியம் என்பன ; இவற்றை யறுவகையுட் பகையென்பர்.

பக்கம்-41.

புன்சொல் நிமித்தம் : அற்பச் சொல்லாகிய குறி நிமித்தம் ; பின் நிகழ்வதை முன்னறிவிப்பது. சச்சரை யரசன் : போர்த் தொழிலுள்ள அரசன். ஆலவட்டம் : விசிறி. துளங்குதல் : அசைதல். பிரசண்ட மாருதம் : மிகுதியுங் கொடுமையான காற்று. தானவர் : அசுரர். தானை : சேனை. அடுதல் : கொல்லுதல். பொச்சல் : பொய். எற்றுக்கு : எதற்கு. பற்றுக்கோடு : ஆதாரம்.

பக்கம் - 42.

வாய்த்துழி : நேரிட்ட விடத்து. நச்சுமரம் : விஷமரம். களைதல் : பறித்தல். காழ்ப்பு : வைரம். குடாரம் : கோடரி. இயலுதல் : முடிதல். தேறிய ஆறு : தேர்ந்த விதம். இழுக்கு : குற்றம்; (Drawback).

செய்யுள்

உரை :—நட்பு பிரித்தல் - (தனது) சிநேகிதரைப் பகையாக்கிக் கொள்ளுதலும், பகை நட்டல் - பகைவரோடு சிநேகம் செய்தலும், ஒற்று இகழ்தல் - வேவு காரரை அவமதித்தலும், பக்கத்தார்யாரையும் ஐயுறுதல் - தன் அருகேயிருக்குநர் யாவர் மாட்டினும் சந்தேகப்படுதலும், தக்கார் நெடுமொழி கோறல் - மேன்மையுடைய பெரியோரது உறுதி மொழிகளைக் கடந்து நடத்தலும், குணம் பிறிது ஆதல் - (முன்னிருந்த) தனது தன்மை வேறுபடுதலும், (ஆகிய இவை யனைத்தும்) கெடுவது காட்டுங்குறி-(ஓரரசன்) இனிக்கெட்டழியப் போகு மாற்றினை முன்னரே காட்டுகின்ற உற்பாதங்களாம்.

குறிப்பு :—நட்பு, பகை இவ்விரண்டும் பண்பாகு பெயர்கள். ஒற்று - முதனிலைத் தொழிலாகு பெயர். குறி - அறிகுறி.

பக்கம்-43.

நிறை : வரி. வம்பின் : வாருங்கள். அநுமதி செய்து : கட்டளையிட்டு. திருமுகம் : ஓலை ; இது தகுதி வழக்கு. பரித்த : தாங்கிய. நாட்டியம் : கூத்து. வித்தியாதரர் : ஓர் வகை தேவ ஜாதியார். சேறல் : செல்லுதல். பீதாம்பரம் : பொற்பட்டாடை ;

பக்கம்-44.

முத்தம் : முத்து ; மருப்பு : தந்தம். நூதனமான : புதிதான. புகையும் : கோபிக்கும். அன்னோன் பணி : அவன் கட்டளையிட்ட வேலைகள். மூர்ச்சனை : மூர்ச்சித்தல்.

பக்கம்-45.

புதல்வர் : பிள்ளைகள். கோடி : தங்கம். சாதிப்பவளங்கள் : சிறந்த பவளங்கள். அனந்தரம் : பிறகு ; அந்தரவழி : ஆகாசவழி. கவழிகை : திரைச்சீலை.

பக்கம்-46.

மூண்டது : உண்டாயிற்று. முடித்தலையிருந்து : கிரீடத்தின் நுனியினின்று ; அரதனாசனம் : இரத்தினமுள்ள இடம். புயம் : தோள். வதனம் : முகம் ; உறுக்குதல் : அதட்டுதல் ; ஆழி : சக்கிரம். வறிதாக : பயனில்லாமல்.

பக்கம்-47.

பாணோபசாரம் : பாணத்தைப் பிரயோகித்தலாகிய உபசாரம். 'விண்ணுலகையும் அரசாளக் கொடுப்பேன்' என்றது மங்கல வழக்கு. பூரகூடம் : திறைப்பொருள் ; 'இது ப்ராப்ருதம்' என்னும் வடமொழிச் சிதைவு ; கையுறை : காணிக்கை. இறுதார்க்கு : செலுத்தாதவர்களுக்கு. பார்த்திவன் : அரசன். இயம்புமின் : சொல்லுங்கள். நாணி : வெட்கமடைந்து.

பக்கம்-48.

வர்த்தமானம் : வரலாறு. [illegible] : கொழுந்து. உளை : பிடரிமயிர். உகிர் : நகம். ஒளி : வீசுகின்ற. எயிறு : பல். தெரிமா : சிங்கம், பிரசித்தமான விலங்காதலின் இப்பேர் பெற்றது போலும். அடைகற்கள் : மலையைச் சார்ந்துள்ள கல்லுகள். புடைபதர் : புடைக்கப்பட்ட பதர். உரும் ஏறுண்ட : இடி மேல்வீழப்பெற்ற. கட்செவி : பாம்பு. கண்களையே காதாக உடையது என்னும் காரணக்குறி ; இது சக்ஷுச்ரவா : என்னும் வடமொழியின் மொழிபெயர்ப்பு. உட்கி : பயந்து.

பக்கம் - 49.

பவனிவரல் : ஊர்கோலம் வருதல். நுந்தை : நும் தகப்பன். விண்டு - அகல. பிரிந்து - நீங்க. மதிக்க ; தடுக்க. வயப்புலி ; சிங்கம். இயக்குவம் - செலுத்துவோம். கலிழ : வருத்தி ; பொலிமதி : விளங்கு. இதில்மதி - முன்னிலை யசை ; "மியாயிக மோமதி" என்பது நன்னூல். பொருமுபு எழ : பூரித்துத்தோன்ற ; நகாயுதம் : நகத்தையே ஆயுதமாக வுடையது என்று சிங்கத்திற்குக் காரணக்குறி ; செயிர்பு : கோபித்து. முழை - குகை.

பக்கம் - 50.

வித்தகர் : இங்கு, தூதர். வீய : கெட. மூழைஞ்சு : மலைக்குகை. உறழும் : ஒக்கும். வலிந்துப்போக : வலியச்செல்ல. கலான் : தொடை. இது 'சக்தி' என்னும் வடசொற்சிதைவென்பர். கம்பலம் : இரத்தினகம்பளம். குவால் : கூட்டம். உவா : அரசயானை. ஒருங்கி : பதிந்து. பஞ்சானனம் : பரந்த முகமுடையது என்று சிங்கத்திற்குக் காரணக்குறி. சாரல் : மலைச்சாரல். அணியன் : கிட்டியவன். வயப்போத்து : வலிய ஆண்சிங்கம். அதுகல் : நெருங்கிய கல். பிதிர் : பொடி. அத்தகடகம் :

அஸ்தகடகம் எனும் கையில் அணியும் வளை. குஞ்சி : ஆண்மக்கள்மயிர். தொடர் கொண்டு திரித்த : கயிற்றினாற் கட்டி ; சேயதாய் மேய : தூரத்திலுள்ள தாய்ப் பொருந்தின. காளி கொடியது என்பது பொருள் ; சிங்கம். காயம் பனிக்க-உடல்நடுங்க. ஓட்டெடுத்தல் : ஓடிப்போதல். இளையகாளை : இங்கு, திவிட்டன் ; காளை - உவமையாகு பெயர்.

பக்கம் - 51.

1. உரை :—அங்கு-அப்பொழுது, கழல் - (அந்தத் திவிட்டனுடைய) வீரக்கழல்கள், ஆர்த்தில - சப்திக்கவில்லை ; கால்களும்—, நிலம் உறு- பூமியிற் படவில்லை ; முடங்க - மடங்கவுமில்லை ; அழலும் - சொலிக் கின்ற, செஞ்சுடர் கடகம்-சிவந்த ஒளியையுடைய கடகமென்னும் அணியை (அணிந்த), ஏக அவை-கைகள், புடை பெயரா—பக்கங்களில், அசையவில்லை; குழலும் குஞ்சியும்-அளிசுரிந்தமயிர்முடியும், மாலையும்-பூமாலையும், கொளு விய தொடரும் - (அக்குஞ்சியைக்) கட்டியகயிறும், எழுந்து - மேலெழுந்து, எழிலும் - அழகிய, தோளிலும்—, எருத்திலும் - பிடரியிலும், வீழ்ந்தில - விழுந்து படிந்தனவில்லை.

குறிப்பு :—அவ்வ - பகுதிப்பொருள் விகுதி. உம் : சாரியை.

2. மரங்கள்—, வேரொடும் வீழ்ந்தென - வேரோடு கீழே விழுந்தன வாக, விளிதொடர்ந்து எழுந்த - காற்றுக்குள் இரைசையாய் மேலே எழுந் தன ; நிரந்த - கூட்டமான, மான்களும் பறவையும்—, நிலம் கொண்டு - தரையில் நின்றுகொண்டு, பதைத்த - துடித்தன ; அரம்கொள் - அரமென் னும் ஆயுதத்தை யொத்த [மிகவும் கூர்மையான], வெம்பரல் - கொடிய பருக்கைக் கற்களையுடைய, அணிவரை - அழகிய மலையின், கொடு முடி அவைதாம் - சிகரங்கள்தாம், உரம்கொள் - வல்லமையுடைய, தோளவன் விரல் நுங்கிஉற - தோளையுடைய திவிட்டனுடைய விரல்பட்டுச் செல்லுத லால், உடைந்து ஒழிந்த - உடைபட்டு ஒழிந்தன.

குறிப்பு :—'கீழ்ந்தென' என்பது 'செய்தென' எனும் வாய்பாட்டு வினை யெச்சம்.

வனதேவதை : காட்டிலுள்ள தெய்வம். கண்டீரம் : இது கண்டீர வம் என்றதன் திரிபு ; கழுத்தில் ஓசையையுடையது எனச் சிங்கத்திற்குக் காரணக்குறி. அண்டிய : நெருங்கிய. கேசரி : பிடரிமயிரை யுடை யது எனச் சிங்கத்திற்குக் காரணக்குறி ; எனவே, ஆண்சிங்கம். ஆரவாரம் : பேரிரைச்சல். நிலகம்பம் : பூமிநடுங்கல். அரியரச : சிறந்தசிங்கம். கொ டும்புலி : சிங்கம். மாபுலி என்பதுமிது. செழும் : நிறைந்த. மடங்கல் : ஆண்சிங்கம். பிலம் : குகை. உதிரம் : இரத்தம்.

பக்கம் - 52.

விசும்பினர் : ஆகாயத்திலுள்ளவர். உடல் பனித்தனர் : தேகம் நடுக் கப்பெற்றனர். அரசு : சிங்கம் ; பேழ்கள் : பிளப்புக்கள் ; அடிகாள் : பெரியோய் ; அளி : சிங்கம். மாள : இறக்க. சேறும் : செல்வோம்; தும்- தன்மைப்பன்மை விகுதி.

உரை :—1. * கற்றவர் - படித்தவர்களும், கடவுள் தானம் சேர்ந்தவர் - கோயில் முதலிய இடத்தை அடைந்தவர்களும், களைகண் இலார் - திக்கற்ற வர்களும், அற்றவர் - பொருளற்றவர்களும், அந்தணாளர் - பிராமணர்களும்,

அன்றியும் - இழ்க்கூறியவர்களல்லாமலும், அனைய நீரார்க்கு - அத்தன்மை யுடையவர்களுமாகிய இவர்களுக்கு, உற்ற ஓர் இடுக்கண் வந்தால் - பெரியதொரு துன்பம் வந்தால் உதவுதற்கு - (அதனைப் போக்கி) உதவுவதற்கு, உரித்து அன்று ஆயின் - உரியது அன்றாகும் ஆயின், பெற்ற இ உடம்பு தன்னால்—, பெறும்பயன் இல்லை.

உரை:—மன்னுயிர் வருத்தங் கண்டும்—, வாழ்வதே வலிக்கும் ஆயின் - (ஒருவன் அதைப்போக்காமல் தான்) வாழ்வதையே வலிமையாகக்கொள்வானாயின், அன்னவன் ஆண்மை ஆவது—, அலிபெற்ற அழகுபோலாம்—; 'யான்—, என்னை கொடுத்தும் - எனதுயிரைக் கொடுத்தாயினும், வையத்து இடுக்கண்நோய் கெடுப்பன் - உலகத்துவரும் துன்பமாகிய வியாதியைப் போக்குவேன்', என்னும்—, நின்னையே—, போலும் - ஒக்கும், நீரர் - தன்மையுடையவர், நிலமிசை—, நிலவி நின்றார் - (கீர்த்தியினால்) விளங்கி நின்றார்கள்.

பக்கம் - 53.

மகிழ்சிறந்தனர் : சந்தோஷம் மிகப்பெற்றனர். அச்சம் : பயம். இறுகப்புல்லி : கெட்டியாய்த்தழுவி. வனத்துகள் : காட்டுப்புழுதி. போற்றி : வாழ்க ; இது வியங்கோள். வட்புலி : புலியினும் வண்மையுடையது என்சிங்கத்திற்குக் காரணக்குறி.

பக்கம்-54.

கலியாணச் சருக்கம்.

திவிட்டனது கலியாணத்தைக்கூறுவது.

உரை :—செங்கண்மால் - சிவந்த கண்களையுடைய திருமாலின் அம்சமான திவிட்டன், சிங்கம் வென்று—, செழுமலர் திலதம் கண்ணி - அழகிய மலர்களாலாகிய சிறந்த முடிமாலையுடைய, திங்கள்மா வண்ணனோடும் - சந்திரன்போன்ற சிறந்த நிறமுடைய விசயனுடனே, திருநகர் பெயர்ந்தபின்னை - சிறந்த (தனது) பட்டணத்திற்குத் திரும்பிய பின்னர், அம் கண்மாற்கு உரிய - அழகிய கண்களையுடைய அத்திவிட்டனுக்குத் தக்க, நங்கை-மகளும், அரும்பெறல் அவட்கு - பெறுதற்கு அருமையானவளுமான அச்சுயம்பிரபை என்பாளுக்கு, தாதை - தந்தையாகிய, வெம் கண்மால் களிறு அன்னான் தன் - கொடிய கண்களையுடைய பெரிய மதயானையை யொத்த சடியரசனது, திறம் - செய்தியை, இனி விளம்பல் உற்றேன்—.

தமராயினர் : பந்துக்கள். வர்த்தமானம் : ஒரு வித்தியாதர நகரம். சக்கிரி : அரசன் வச்சிர தாடன் : வச்சிராயுதம் போன்ற அடித்தலையுடையான். புரவலன், தராபதி : அரசன். வேயிறேர் : ஒற்றர். பண் உறுத்தல் : அலங்கரித்தல். இளவல் : தம்பி ; இதில், அல் - பெயர்விகுதி.

பக்கம். 55.

அரிபுரம் : ஒரு வித்தியாதரநகரம். பொருநன் : அரசன், போர்செய்பவன், வீரன். வியாக்கிரரதன் : புலியை வாகனமாக வுடையவன். கன்னிமாடம் : கலியாண மாகாப்பெண்கள் வசிக்குமிடம். சேடியர் : தோழியர். பூஷணம் : அணி. மிளிரும் : விளங்கும். லகு : லேசு.

பக்கம் - 56.

மஞ்சிகை : பெட்டி. குப்பி : ஒருவகைப்பாத்திரம். எஞ்சல் இல் குறைவில்லாத. கொம்பு : ஊதுகொம்பு. காகளம் : ஒருவகைவாத்தியம் 'பாராட்டுத்தாய்' என்பது முதல் 'செவிலித்தாய்' என்பது ஈறாக : கீழ்க் கூறிய நால்வகைத்தாயர். ஊர்தி : வாகனம். இரசிதகிரி : வெள்ளிமலை. இரணியவரை : பொன்மலை. காவுகள் : சோலைகள். காண்மதி : பார்ப்பாய்; இதில் மதி : முன்னிலையசை. ஆகாசஅயநம் : ஆகாசவழி. அங்கணார் : அவ்விடத்திருப்பவர். மங்குல் : மேகம். வங்கமலை : வெள்ளிமலை.

பக்கம் - 57.

உரை :—1. இரைக்கும் - சப்திக்கின்ற, அம்சிறை பறவைகள் என - அழகிய இறகுகளையுடைய பறவைகள் போல, பெயர் - திரிகிற, இனம் வண்டுடைய சூழ - கூட்டமாகிய வண்டுகள் பக்கத்திற் சூழ, நுரைகள் என்னும் அக்குழம்பு - நுரைகளாகிய அந்தச் சந்தனக்குழம்பை, கொண்டு - (தான்) கொண்டு எதிர்ந்து—, எழ நடங்கிய - (அலைகள்) மேலே எழுந்து மடங்கும் தன்மையால், (கங்காநதியானது), திரைகரங்களின் அலைகளாகிய கைகளால், செழுமலை - செழுமையான மலைகளிலிருந்து கொண்டு வருகிற, சந்தனம் திரள்களை - சந்தனக்கட்டைகளின் கூட்டங்களை, கரைமேல் வைத்து—, அரைக்கும் - அரைக்கிறதுபோலும். மற்றும் - பின்னும், இது - இந்த ஆறானது, குணகடல் திரையொடும் பொருது அல்லது - கிழக்கடலின் அலைகளோடு தாக்கி அல்லாமல், அவியாது - அடங்காது.

சவ்வியம் : இடதுபக்கம் பெயர்வது : செல்லுவது. கலங்கள் : ஆபரணங்கள். அறிமின் : அறியுங்கள், பொன்உறழ : பொன்னையொப்ப. மின்பிறழும் : ஒளிவீசும். கரதலம் : கையினிடம். நதம் : மேற்குத்திக்கிற் செல்லும் ஆறு. விளையாட்டு இழைப்பது - விளையாட்டைச் செய்வது.

உரை :—2. உயரும் சந்தனம் பொழில் - உயர்ந்துள்ள சந்தனச் சோலையை, அலைத்து—, ஒளிர் மணிகலன்களை - விளங்குகின்ற இரத்தினாபரணங்களை, உமிழ்ந்திட்டு வெளிப்படுத்தி, பெயரும் - பெயர்ந்து செல்லுகிற, தெள்திரை பிறங்கத்துள் - தெளிவான அலைகளாகிய மலையினிடத்து, பிணங்கிய - நெருங்கியுள்ள, பெருவரை அகில்தேக்கி - பெரிய மலையிலுள்ள அகில்கட்டைகளைக் கொண்டுவந்து நிறைத்து, வயிரம் வேதிகம்மலைவது - (கரைகளிலுள்ள) வச்சிரமிழைத்த மேடைகளில் மோதுவது அன்றியும் அச்சிந்து நதியானது) கோபுரம் வாய்தலின் - (சிறுலயத்துக்) கோபுர வாயிலின், படிதீண்டி - படியைச்சேர்ந்து, அயிரைவார் கார்குடகடல் - மீன்களையும் நீண்டகரையையுமுடைய மேல்கடலின், திரையொடும்பொருது அல்லது அவியாது - அலைகளோடும் மோதியல்லாமல் அடங்காது.

'செல்வம்' என்றது இங்குச் சுயம்பிரபையை. முகிற்படலம் - மேகக் கூட்டம். கருவரை - கரியமலை.

பக்கம் - 58.

கனன்று : கொதித்து. அளகம் : கூந்தல். அரிவை : பெண். இடூஉந்து: கிண்டு. பகடு : ஆண்யானை. பிடிக்கணம்: பெண்யானைகளின் கூட்டம். இலங்குறும் : விளங்கும், அலங்கிருதி : அலங்காரம். நிவளுதல் : அசைந்து விளங்குதல். விற்பனமயிலே : அறிவுள்ள மயில்போன்றபெண்ணே; இ

து இங்கே சுயம்பிரபையைக்குறித்தது. உழையவள் : சமீபத்திலிருப்பவள். பந்தி : குதிரைச்சாலை. கொட்டில் : கொட்டகை.

பக்கம் - 59.

அனவரதம் : எப்பொழுதும். நும்பாடி : உம்முடைய இடம். வளையாது - அளவிடாமல்.

பக்கம்-60.

எய்திணமை : அடைந்தமை. தந்தி : தந்தத்தையுடையது என யானைக்குக்காரணக்குறி. கந்து : யானைகட்டுந்தறி. சால்நிகளம் : கால்சங்கிலி. வரிபுரிபொருந்திய : நீட்சியும் முறுக்கும்பொருந்தின. கச்சைகள்வீக்கி : யானைக்கழுத்திடு கயிற்றைக்கட்டி. கிடுகு : தேரின் ஓர் உறுப்பு. புனகம்பொருந்தி : கண்ணுடிகட்டி. பரவைத்தட்டு : அலைமானத்தட்டு. புடைமிண்டுதல்: பக்கங்களில் நெருங்குதல். மணிக்கோவை : மணிமாலை. கவரிஇணைந்து: மறைமயிரினால் செய்யப்பட்ட ஒரு தலைபாபரணத்தைப் பொருந்தி. நாற்றுக : தொங்கவிடுக இதுபிறவினை. பூரணகும்பம் : நீர் நிறைந்துள்ளகுடம். இருநிதி : பெருஞ்செல்வம். கண்ணுகம் - குதிரை. மட்டு - வாசனை, தேன். பூங்கா - பூஞ்சோலை. பவனகவனம் : வாயுவேகம்.

பக்கம் - 61.

செய்ருளுரை.

திங்களை இரண்டு கூறுசெய்து - சந்திரனை இரண்டு பிளப்பாக்கி, முன் செறித்த போல - முன் அமைத்தன போல, மங்கள வடிவின் வந்த - மங்கள கரமான வடிவத்துடன் வந்த, வலன் உயர் வயிரம் கோடு - வல்லமை மிகுந்த உறுதியான தந்தங்களையும், செம்கனி விதித்த போலும் - சிவந்த சந்தனக் குழம்பினுல் அமைத்தன போன்ற, செம்பொறி - சிவந்த முகப்புள்ளிகளையும், சிறு கண் - சிறிய கண்களையு முடையதும், வெம் கனி - கொடிய களிப்பையுடைய, வியாழம் வல்ல விறலது - புலியுடைத்தான வலிமையைத் தான் உடையதுமாகிய, வேழம் வருக - பட்ட யானை யானையானது இங்குவரக்கடவது, என்றுன்-என்று கட்டளையிட்டான்.

தவளம் - வெண்மை, கஞ்சக்கருவி - வெண்கல வாத்தியம், நரம்புக்கருவி-வீணைமுதலியன. மிடற்றுக் கருவி யென்றது பாடுந் தொண்டையை.

பக்சம் - 62.

பற்ருத : ஈடாகாத. வரமுன் : வராமுன்.

பக்கம் - 63.

விநயம் : வணக்கம். ஐக்கியம் : ஒற்றுமை. மலையரசன் : வித்தியாதராரஜன்.

செய்யுளுரை.

பொலம் கலம் புலம்ப - பொன்னுபரணங்கள் சப்திக்கவும், ஆயம் புடை நின்று - தோழியார்களின் கூட்டம் பக்கத்திற் சூழ்ந்து நின்று, போற்று கூவ - வாழ்த்துக்களைச் சொல்லவும், அலங்கலும் குழலும் தாழ - மாலைகளும் கூந்தலும் தொங்கவும், அணிகிமிறு ஆரவம் செய்ய-(அவற்றில்) மொ

ய்க்கின் வண்டுகள் சப்தம் செய்யவும், இலங்கல் - விளங்குகின்ற, அம்-அழகிய, ககனம் மாடத்து - ஆகாய மளாவிய உப்பரிகையின், எழுநிலை எறல் உற்றான் - ஏழாவது நிலைமையு அடைந்தவன், விலங்கலின் குவடு சேரும் - மலையினது சிகரத்தை அடைகின்ற, மெல் இயல் - மெல்லிய தன்மையையுடைய, தோகை போல்வாள் மயிலையொத்தவளாயினள்.

காப்பு : கதவு. சுட்டி : குறித்து. மீட்சல் ஆற்றுமை : திருப்பக்கூடாமல்.

பக்கம்: 64.

செய்யுளுரை.

தாமரு- பரிசுத்தம்பொருந்தின, நீலம் என்னும்மணி - நீலரத்தினம் துணைந்தஅனையூ - திரண்டாற்போன்ற, குஞ்சி - மயிர்முடியுடைய, காமருகாளை - அழகிய காளைபோல்பவனாகிய திவிட்டன், தாமரை அனைய—, கண்ணும் - கண்களையும், தட கையும் - விசாலமான கைகளையும், பவளவாயும் - பவளம்போன்றவாயையும், பூமருகண்ணி - அழகுபொருந்திய மாலையாகத் தொடுக்கத்தக்க, புதுபூவைமலர் - அப்பொழுதுமலர்ந்த காயாம்பூ போன்ற, ஒளியும் - (தன்னுடைய) தேக காந்தியையும், காட்டி-காண்பித்து, கன்னிகண்களை - அப்பெண்ணினது கண்களை, சிறைகொண்டிட்டான் தன் வசமாக்கினன்.

பணிகள்திருத்துதல் - ஆபரணங்களை ஒழுங்குபடுத்தல். குறங்கு - தொடை, அந்தர்ப்புரம் - அந்தப்புரம், காண்டற்கு அமைந்த - தரிசிப்பதற்குத் தக்க, காப்புமங்கலங்கள் : இரக்ஷைக்குத்தக்க மங்கலப்பொருள்கள்.

பக்ரம் - 65.

தாபதமகளிர் : முனிவர்மகளிர். கைத்தாயர்-செவிலித்தாயார். இதஞ்சேர் சேடங் கொடுகூறினும். சிவிகை : பல்லக்கு. பூவணை : புஷ்பசயனம். இரட்டல்; வீசுதல். உழைக்கலமகளிர் : பரிசாரகப்பெண்கள்.

பக்கம் - 66.

குறுமுறுவல் - புன்சிரிப்பு. திருமொழிப்பண்ணிகாரம் - அழகியவார்த்தையாகிய சிற்றுண்டிவகை, துகிலிகைத்தொழில் - சித்திரமெழுதும்வேலை, சமைத்தல் - அமைத்தல், பண்ணல்.

பக்கம் - 67.

வழிப்படல் ; பூசித்தல். இளையநம்பி : இங்குத்திவிட்டன். அடிகள் : சுவாமி. அற்றம் : சமயம்.

செய்யுளுரை.

வெய்யோன் - சூரியன், விண்இயல் - ஆகாயத்திற் பொருந்தின், உருவம் வீதிமேல் நின்று - அழகிய மேலிடத்தினின்றும், இழிந்து - இறங்கி, கண் இயல் - விசாலம் பொருந்திய, விலங்கல் நெற்றி - (அஸ்த) மலையின் சிகரத்தை, கதிர்என்னும் கையின் ஊன்றி - கிரணங்களாகிய கை

களால் ஊன்றிக்கொண்டு, மண் இயல் - பூமியிற் பொருந்திய, மரத்தின் சாகை திதிபிடித்து - மரங்களின்கிளை நுனிகளைப் பிடித்துக்கொண்டு, அவையும்விட்டு - (பிறகு) அவற்றையும் விட்டுவிட்டு, பண் இயல் - (தன்னுடைய) இயற்கையான குணமானது, பிறிது ஒன்றாகி - மாறுபட்டு, பையவே மறைந்து போனான் - மெல்லமறைந்து சென்றான்.

பக்கம் - 68.

மதனாஸ்திரம்: மன்மதபாணம்; மதன + அஸ்திரம் எனப்பிரிக்க. இது வடமொழித்தீர்க்க சந்தி. வசம்அழிந்து - சுவாதீனம் கெட்டு. சந்திரகிரணம்: சந்திரன் ஒளி (கிரணம்) சாமம்: ஏழரைநாழிகை கொண்டகாலம். இதுயாமம் என்றிருத்தலு முண்டு. பொருகாமம்: மிக்க ஆசையென்பது கருத்து. ஒருவாது: தணியாமல், ரஞ்சித வார்த்தைகள்: சந்தோஷம் உறுவிக்கும் வார்த்தைகள். நியமம்: செய்கடன். நைமித்திகம்: விசேடச்சடங்கு. ஒருத்தல்: ஆண்யானை.

பக்கம் - 69.

இளையபெருமாள் என்பது திவிட்டனை, அக்னிகாரியம்: விவாகத்திற் செய்யும் ஓமங்கள்,

பக்கம் - 70.

கோட்டம்: கோடு, வெள்ளையிடுதல்: அரிசி இடுதல் குணக்கு - கீழ்திசை. வால்வளையின்று: சுத்தமான மண்டலம் அமைத்து. பரிதிசமிதைகள்: பரிதிகளும் மற்றும்வேண்டும் சமிதைகளும்; பரிதிகள், கீழ்திசையொழிந்ததிசைகளில் வைக்கப்படும் சமிதைகள் சமித்து: பலாசங்கொம்பு; அரசங்கொம்பு மாகலாம். கிரியை: சடங்குகள். எரிவலம் வருதல்: அக்கினியைச் சுற்றிவருதல். கன்னிதமர்: பெண்ணின் உறவின் முறையார். தியாகம்: வரம்பில்லாத கொடை. மணாட்டி: கல்லியாணப்பெண்.

செய்யுளுரை.

உலம் பாராட்டும் தோளான்—திரண்டுள்ள கற்றூணின் தன்மையைத் (தன்னிடத்திற்) கொண்ட தோள்களையுடைய திவிட்டனானவன், ஒள் பூ குழலாளை: ஒளிபொருந்திய மலர்களைத் தரித்த கூந்தலையுடைய சுயம்பிரபையை, நலம் பாராட்டி — இன்பத்தாற் கொண்டாடி, நாகுஇள முல்லை நகுவிக்கும்-மிகவும் இளமையான முல்லைக் கொடியை மலரச் செய்கின்ற, வலம் பாராட்டி வந்தது—(பூமியைப்) பிரதக்ஷிணையாகச்சுற்றி வருவதாகிய, ஓர்மாரிபுயல் ஒத்தான்—ஒரு கார்காலமேகத்தை யொத்தான்: குலம் பாராட்டும் கொம்பும்—பிறந்த குலமும், புக்ககுலமுமாகிய இரண்டுகுலமும் கொண்டாடப் பெற்ற கொடிபோன்ற அப்பெண்ணும், ஓர் முல்லைக் கொடியொத்தாள்—ஒருமுல்லைக் கொடியைப் போன்றாள்.

வசன சூளாமணிப் பகுதியுரை முற்றுப் பெற்றது.

சுபமஸ்து.